வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 07.02.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 60 | பக்கங்கள் : 16

## துருக்கி - சிரியா நிலநடுக்கம்

# 2,400இற்கும் மேற்பட்டோர் பலி!



அங்காரா, பெப். 07

துருக்கி - சிரிய நாடுகளின் எல்லைப் பகுதியில் சில மணி நேர இடைவெளியில் இடம்பெற்ற நில நடுக்கங்களால் 2 ஆயிரத்து 400 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயங்களுக்கு இலக்காகியுள்ளனர். மீட்பு பணிகள் தொடர்ந்து வருவதால் இந்த எண்ணிக்கைகள் மேலும் உயரும் என்று அஞ்சப்படுகின்றது.

15

## ஐ. எம். எவ். கடன் தவறினால் ஆபத்து!

### வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, பெப். 07

மார்ச் 31ஆம் திக திக்கு முன்பாக சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைக்காவிடின் நாட்டின் பொருளாதாரம் மிகமோசமான நிலையை அடையும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு அவர் அளித்துள்ள நேர்காணலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# பயங்கரவாதத்தை வளர்க்க பாகிஸ்தான் முயல்கிறதா?

## கிழக்கில் பரபரப்பை கிளப்பும் பிரசுரங்கள் மூவின சமூக மக்களும் அச்சத்துக்குள்...!

அக்கரைப்பற்று, பெப்ரவரி 06

கிழக்கு மாகாணத்தில் மட்டும் ஆயிரம் இஸ்லாமிய இளைஞர்களுக்கும் மேல் பாகிஸ்தான் தூதரகம் ஊடாக வழங்கப்படும் புலமைப்பரிசில் தொடர்பில் பலத்த சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இது தொடர்பில் பல கேள்விகளை எழுப்பும் விதமான பிரசுரங்கள் கிழக்கு மாகாணத்தில் பரவி வருகின்றன.

15

## வடக்கின் மக்கள் பேரணி கிழக்கை சென்றடைந்தது!



வெருகல், பெப். 07

தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை - ஆக்கிரமிப்பை கண்டித்து சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி பல்கலைக்கழக மாணவர்களின் அழைப்பின்பேரில் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த பேரணி

15

## வடக்கு மக்கள் பேரணி இன்று மட்டு. நகரில் நிறைவடையும்

மட்டக்களப்பு, பெப். 07

யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த சனிக்கிழமை ஆரம்பமான பேரணி இன்று மட்டக்களப்பு நகரில் நிறைவடையும். இந்த நிறைவுக்கூட்டத்தில் மக்களை அணிதிரளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறைகள் மற்றும் ஆக்கிரமிப்புகளை கண்டித்து

15

## யானை தாக்கி ஒருவர் மரணம்

சம்மாந்துறை, பெப். 07

காட்டு யானை தாக்கியதில் சம்மாந்துறை - நயினாமடுவில் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந் தவர் சம்மாந்துறை - சென்னல் கிராமத்தை சேர்ந்த 51 வயது நபர் ஆவார்.

யானையின் தாக்குதலில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த அவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக சம்மாந்துறை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 13ஆவது திருத்தத்துக்கு மகாநாயக்கர்கள் ஆதரவு!

### ராஜித சேனாரத்ன எம். பி.

கொழும்பு, பெப். 07

13ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த மகாநாயக்க தேரர்கள் முதலில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். ஆனால், ஜனாதிபதி அவர்களுக்கு விளக்கிய பின்னர் அதனை முழுமையாக அமுல்படுத்த தமது ஆதரவை அளித்து வரு கின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்திஷயின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

தீவிரவாதப் பிரிவினரே

15

## இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரிப்பு

### கடற்றொழிலாளர் சங்கம்

யாழ்ப்பாணம், பெப். 07

யாழ். குடா கடற்பரப்பில் இந்திய மீனவர்களுடைய அத்துமீறல் மீண்டும் அதிகரித்துள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சங்கத் தலைவர் சிறீகந்தவேள் பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள சங்க அலுவலகத் தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர்

15

உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023

தமிழ் தேசிய கூட்டமைப்பு

தமிழின ஆன்மாவின் ஒருமித்த சின்னம்!

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

இன்றைய பத்திரிகையில் பாகிஸ்தான் தூதராலயம் கிழக்கில் வழங்கும் புலமைப்பரிசில் பற்றிய செய்தியைப் படித்த போது அந்தச் சம்பவம்தான் ஞாகத்துக்கு வந்தது.

சீனத் தூதரகமும் இது போன்று பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கிவருவது தெரிந்தது தான். ஆனால், பாகிஸ்தானோ மாணவர்களைத் தெரிவுசெய்து பாகிஸ்தானில் படிப்பதற்கான புலமைப்பரிசிலை வழங்குகின்றது.

சீனத் தூதரகமோ இங்கே பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மாதாந்தம் ஐயாயிரம் ரூபாவை மூன்று ஆண்டுகளுக்கு தொடர்ந்து வழங்குகின்றது.

வழக்கமாகப் பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவே இந்த மாணவர்களை தெரிவு செய்து அனுப்பிவர, அவர்களுக்கு சீன தூதரகம் பணத்தை வழங்கிவந்தது.

கடந்த ஆண்டு, சீனத் தூதரகம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் அனுமதி பெற்று தாங்களே பல்கலைக்கழகங்களுடன் தொடர்புகொண்டு மாணவர்களைத் தெரிவு செய்திருக்கின்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவு செய்வதென்றால் எந்தப் பல்கலைக்கழகங்களிலிருந்து மாணவர்களைத் தெரிவுசெய்வார்கள் என்பது தெரிந்ததுதானே.

ஆனால், சீன தூதரகம் நேரடியாக மாணவர்களை தெரிவுசெய்தபோது கிழக்கு பல்கலைக்கழகத்துடனும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடனும் தொடர்பு கொண்டு மாணவர்களை தெரிவுசெய்து அனுப்புமாறு கேட்டிருந்தது.

கிழக்கு பல்கலைக்கழகத்திலிருந்து ஆயிரம் மாணவர்களின் பெயர்களை அனுப்புமாறு கேட்டபோது, பல்கலைக்கழகம் ஆயிரம் மாணவர்களின் பெயர்களை அனுப்பியது. ஆனால், அதில் இருந்த தமிழ் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களை மாத்திரம் தெரிவு செய்து அவர்களுக்கு புலமைப் பரிசிலை வழங்கியது தூதரகம்.

அது மாத்திரமன்றி அண்மைக்காலமாக சீனத் தூதரகம் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களுடன் நெருக்கமாகி வருவதும் இரகசியமானதல்ல.

மீனவர்களுக்கு டீசல் விநியோகம், சில வீடுகள் கட்டிக்கொடுத்தமை, விவசாயிகளுக்கு உரம் விநியோகம் என்று தொடர்ந்து சீனத் தூதரக அதிகாரிகள் வடக்கு, கிழக்கிலேயே கவனம் செலுத்தி வந்தனர்.

அதற்கு காரணம் என்ன என்பதை நேற்று கொழும்பில் வெளியான சிங்கள வார பத்திரிகை ஒன்று தனது அரசியல் பத்தியில் விபரித்திருக்கின்றது.

மிக நீண்டகாலமாக தமிழ் மக்கள் பிரச்னையில் கவனம் செலுத்திவரும் இந்தியா பல தசாப்தங்களாகவே பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை விடுத்து வருகின்றது.

அதுவும் இரு நாடுகள் இடையே செய்யப்பட்ட ஒப்பந்தம் காரணமாக உருவாக்கப்பட்ட மாகாண சபைகளை தொடர்ந்து இயங்க செய்யவோ அல்லது அரசியலமைப்பில் உள்ளவாறு அதிகாரங்களை நடைமுறைப்படுத்தவோ எவ்வளவுதான் இந்தியா அழுத்தம் கொடுத்தாலும் அது நடப்பதாகத் தெரியவில்லை.

அதிகாரம் இல்லாத மாகாண சபைகள் என்று தமிழ்த் தரப்பு அதனை ஏற்க மறுத்து வருவது தவறு என்று அவர்களுக்குப் புரிய வைக்க இந்தியவால் முடியவில்லை.

அதிகம் ஏன் மாகாண சபைகளுக்கான தேர்தல்களைக் கூட மத்திய அரசாங்கம் விரும்பினால் நடத்தும், இல்லையெனில், அதனை நடத்தாமல் எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் காலம் கடத்தும், இதனையே தீர்வாக எப்படி ஏற்றுக்கொள்வது என்ற கேள்விக்கு விடையளிக்கக் கூடிய நிலையில் இந்தியா இல்லை.

அதுதான் ஒரு பக்கம் என்றால் பதின்மூன்றுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பவர்கள் இந்திய கைக்கூலிகள் என்று ஒரு தமிழர் தரப்பு தமிழ் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய, தமிழர்கள் இந்தியாவிடமிருந்து தூர சென்று கொண்டிருக்கின்றனர் என்கின்றது அந்த சிங்கள பத்திரிகை.

இதனை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தும் சீனா, தமிழ் மக்களுடன் நெருங்கிக் கொண்டிருக்கின்றதாம்.

இந்த நிலைமையைப் புரிந்து கொண்ட இந்தியா அண்மைக் காலமாக ஜனாதிபதி ரணிலுக்கு தொடர் அழுத்தம் கொடுத்த தன் விளைவாகவே அவர் இப்போது பதின்மூன்றை அமுல் படுத்துவது குறித்து கரிசனை காட்டிவருகிறாராம்.

சிங்கள கடும்கோட்பாளர்களின் எதிர்ப்பையும்மீறி, பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்தினால், ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பதுபோல இந்தியாவின் ஆதரவை மாத்திரமின்றி, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளையும் சுளையாக அள்ளலாம் என்று கணக்குப் போட்டிருக்கிறாராம் ஜனாதிபதி ரணில் என்கின்றது அந்தப் பத்தி.

நாளை பாராளுமன்றத்தில் தனது கொள்கை விளக்க உரையை நிகழ்த்தவிருக்கும் ஜனாதிபதி, எத்தகைய அறிவிப்பை விடுக்கிறார் என்று பார்ப்போம்.!

**- ஊர்க்குருவி**

# மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் நிர்வாகத்தை முன்னெடுப்பது தவறு!

## மகிந்த தேசப்பிரிய



கொழும்பு, பெப். 07

மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் அரச நிர்வாகத்தை முன்னெடுக்க முடியுமாயின் ஜனாதிபதி, பிரதமர் பதவி எதற்கு,? நாட்டின் நிர்வாகத்துக்கு மக்கள் நேரடியாக தமது பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டும். மக்கள் பிரதிநிகள் இல்லாமல் அரச அதிகாரிகளால் அரச நிர்வாகம் முன்னெடுக்கப்படுவது முறையற்றதாகும் என எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

இலங்கை ஜனநாயக நாடு சர்வதேச மட்டத்தில் செய்துக் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் அரச நிர்வாகம் முன்னெடுக்கப்பட வேண்டும் என சர்வதேச சமவாய சட்டங்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச நிர்வாக கட்டமைப்பில் உள்ளூர் அதிகார சபைகள் முதனிலையில் காணப்படுகின்றன. உள்ளூராட்சி மன்றங்கள் முறையாக இயக்கப்படும் பட்சத்தில் நாட்டின் சூழல் கட்டமைப்பு சிறந்ததாக அமையும்.

ஆகவே, உள்ளூர் அதிகார சபைகள் நாட்டுக்கு அத்தியாவசியமானது. உள்ளூராட்சி மன்ற சபை உறுப்பினர்கள் முறையாக செயல்படாவிட்டால் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எதிர்வரும் மார்ச் 09ஆம் திகதி உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்பை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தேர்தலை பிற்போடும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கும் உண்டு. வேட்பு மனுத்தாக்கலை தொடர்ந்து மூன்று வாரத்துக்கு தேர்தலைப் பிற்போடும் அதிகாரம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு.

2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொவிட் பெருந்தொற்று தாக்கத்தை கருத்திற் கொண்டு பொதுத் தேர்தல் பிற்போடப்பட்டது. உரிய காலத்தில் தேர்தலை நடத்தாமல் தேர்தல் வாக்கெடுப்பை பிற்போடுவது முறையற்றது என நீதிமன்றம் அறிவித்துள்ளது. ஆகவே, தேர்தலை பிற்போடுவது முறையற்றது என்ற நிலைப்பாட்டில் உள்ளேன் - என்றார். (ஐ)

# ஜனாதிபதியின் கொள்கை உரையை ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணிக்கும்!

## நளின் பண்டார தெரிவிப்பு

கொழும்பு, பெப். 06

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் புதன்கிழமை நடைபெறவுள்ள கொள்கை பிரகடன உரை மற்றும் சமர்ப்பிப்பை தமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்கவுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி பிரதம கொறடா நளின் பண்டார ஜயமஹா தெரிவித்துள்ளார்.

"வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறவுள்ள ஜனாதிபதியின் கொள்கை அறிக்கை மீதான இரண்டு நாள் விவாதத்தையும் புறக்கணிக்க தீர்மானித்துள்ளோம். இந்த பயிற்சிகளில் நாங்கள் பார்வையாளர்களாக மாத்திரமே இருப்பதால் ஐக்கிய மக்கள் இந்த நிகழ்வுகளை புறக்கணிக்க முடிவு செய்தது," என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாகவும், இறுதித் தீர்மானம் அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும் விரைவில் அறிவிக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். (ஐ)

# பெலவத்தை வர்த்தகர் கொலை: சந்தேகநபர்கள் தடுப்பு காவலில்

கொழும்பு, பெப். 07

பத்தரமுல்லை - பெலவத்தைப் பகுதியில் நிர்மாணிக் கப்பட்டு வரும் வீடொன்றின் நீச்சல் தடாகத்திலிருந்து, அண்மையில் சடலமாக மீட்கப்பட்ட தொழிலதிபரின் மரணம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பெலவத்தை தொழிலதிபரின் மரணம் தொடர்பில் நேற்று முன்தினம் பிரதான சந்தேகநபர்கள் கைதாகினர்.

கந்தானை பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் அவர்கள் கடவத்தை பகுதியில் வைத்து கைதானதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார். தம்பதியினரான குறித்த சந்தேகநபர்கள் இருவரும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதனையடுத்து, சந்தேகநபர்கள் இருவரையும் நேற்று நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியபோதே, அவர்களை தடுத்து வைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ)

# பருத்தித்துறை லூர்து அன்னையின் நற்கருணை ஆராதனையும் பவனியும்!

வடமராட்சி, பெப். 07

பிரசித்திபெற்ற பருத்தித்துறை - தும்பளை லூர்து அன்னை யாத்திரை புனித தல வருடாந்த திருவிழா கடந்த 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் வழிபாடுகள், மறை உரைகள், திருப்பலி ஒப்புக் கொடுத்தல் என்பன நடைபெற்று வருகின்றன.

இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நற்கருணை ஆராதனை பவனியும் ஆசீர்வாதமும் நடைபெறவுள்ளது.

மறுநாள் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை திருவிழா கூட்டுத்திருப்பலி யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படும். இதனைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூப பவனியும் ஆசீரும் நடைபெறும். (ஐ - 02)

ஈழநாடு
Eelanadu
07.02.2023 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், தை 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

# அரச ஆதரவு தமிழ் கட்சிகளின் செல்வாக்கு?

அரசாங்கத்துடன் இணைந்து செயல்படும் தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் தமிழ் கட்சிகளை நிராகரிக்க வேண்டுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் கூறிவருகின்றனர். அரசாங்க ஆதரவுக் கட்சிகளைத் தமிழ் மக்கள் ஆதரித்தால் தமிழ் மக்களின் பிரச்னைகளை தட்டிக் கழிப்பதற்கு அது வாய்ப்பாகி விடுமென்று கூட்டமைப்பின் தலைவர்களில் ஒருவரான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்திருக்கின்றார். கடந்த உள்ளூராட்சி தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையான பின்னடைவுகளை சந்தித்திருந்தது. இதற்கு என்ன காரணம்?

தமிழ்த் தேசியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி தற்போது நான்கு கட்சிகள் போட்டியிடுகின்றன. இதுவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு இணைந்திருந்த தமிழரசு கட்சி அதன் வீட்டுச் சின்னத்தோடு வெளியேறியதைத் தொடர்ந்து கூட்டமைப்பு இரண்டு அணிகளாகியிருக்கின்றது. அது வரையில் பிறிதொரு கூட்டணியாக இருந்த சி. வி. விக்னேஸ்வரன் பதவியை காரணம் காட்டித் தனியாகப் போட்டியிடுகின்றார். இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக தமிழரசு கட்சி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவை போட்டியிடுகின்றன. அடிப்படையில் இது யாருக்கு சாதகமானது?

அரசாங்க ஆதரவு கட்சிகளை நோக்கி ஏன் மக்கள் செல்ல நேர்கின்றது? 2009இல் யுத்தம் முடிவுற்றதை தொடர்ந்து, தமிழ் மக்கள் பெரும்பான்மையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே ஆதரித்து வருகின்றனர். இரண்டு தேர்தல்களில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சியை மக்கள் கண்டு கொள்ளவில்லை. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள் முரண்பாடுகளும் பிரச்னைகளும் ஊடகங்களில் அம்பலமானதைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் கூட்டமைப்பின் மீதான அதிருப்தி அதிகரித்தது. இதனைத் தொடர்ந்தே கூட்டமைப்பின் மீதான செல்வாக்கு சரியத் தொடங்கியது. 2020 பாராளுமன்ற தேர்லின் போது நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தில் தமிழரசு கட்சியின் உள் முரண்பாடுகளும் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்முரண்பாடுகளும் பெரியளவில் பேசுபொருளாகின. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நான்கு ஆசனங்களை இழந்து போனது. தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவையும் மக்கள் தோற்கடித்தனர். அதிலிருந்துகூட எவருமே கற்றுக்கொள்ள முயற்சிக்கவில்லை.

2020 தேர்தலில் அதுவரையில் மக்களால் கண்டுகொள்ளப்படாமலிருந்த கஜந்திரகுமார் பொன்னம்பலம் வெற்றிபெற முடிந்தது. விக்னேஸ்வரன் வெற்றி பெற முடிந்தது. அங்கஜன் இராமநாதன் அதிக விருப்பு வாக்குகளில் வெற்றி பெறமுடிந்தது. கிழக்கில் பிள்ளையான் வெற்றிபெற முடிந்தது. ராஜபக்ஷக்களின் மொட்டு கட்சியில் போட்டியிட்ட ஒரு தமிழர்கூட கிழக்கில் வெற்றி பெற முடிந்தது. வீடு சின்னத்தில் ஒன்றுபட்டிருந்த கூட்டமைப்பின் மீதான மக்கள் அதிருப்தியே ஏனையவர்களுக்கான வாய்ப்பை வழங்கியது. மக்கள் முதன்மையாக நம்பிவரும் ஒரு கட்சியின்மீது அதிருப்தியடையும்போது அவர்கள் பல பக்கங்களாக சிதறுவர். 2020 பாராளுமன்ற தேர்தலில் அதுதான் நடந்தது.

ஆனால், இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக மூன்று அணிகள் போட்டியிடுகின்றபோது, இதன் பலனை அரசாங்க ஆதரவு தமிழ் கட்சிகள் அறுவடை செய்ய வாய்ப்பு உண்டு. கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய தமிழரசு கட்சியும், கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் (காங்கிரஸ்) தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவே பேசி வருகின்றனர். இதனால், அரசாங்க ஆதரவு கட்சிகளே பெருமளவில் நன்மையடைந்து வருகின்றன.

அரசாங்க ஆதரவு கட்சிகளை நோக்கி மக்கள் சாய்கின்றார்களென்றால் அதற்குக் காரணம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசிய கட்சிகள் மக்களின் நம்பிக்கையை இழந்துவருகின்றன. அரசாங்க ஆதரவு கட்சிகளின் செல்வாக்கை வீழ்த்த வேண்டுமாயின் தமிழ்த் தேசியக் கட்சிகள் என்போர் மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். இதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை ஏனைய கட்சிகள் கைவிட வேண்டும். தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக அநாகரிகமான பிரசாரங்களில் ஈடுபடுவது முறையல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்தினால் அரசாங்க ஆதரவு கட்சிகளே வடக்கு - கிழக்கில் பலமடையும்.

# போதை அரசியல்வாதிகளை தேர்தலில் நிராகரிப்போம்!

## ஐங்கரநேசன் அழைப்பு



யாழ்ப்பாணம், பெப். 07

யுத்தத்துக்குப் பின்னர் தமிழ் மக்களிடையே போதைப்பொருள் பாவனையும் இதன் விளைவாக வன்முறைச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. போதையில் மிதக்கும் அரசியல்வாதிகள் போதைப்பொருள் எதிர்ப்பு ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கும் இழிவு அரசியலே இங்கு நிலவுகிறது. போதை அரசியல்வாதிகளால் மக்களுக்கு ஒருபோதும் சரியான பாதையை வழிகாட்ட முடியாது. எனவே, இந்த உள்ளூராட்சித் தேர்தலில் போதை வேட்பாளர்களையும் வாக்குகளுக்காக மதுபானங்களை விநியோகிக்கும் வேட்பாளர்களையும் நிராகரிப்போம். போதை ஒழிப்பை உள்ளூராட்சி வேட்பாளர்களில் இருந்து ஆரம்பிப்போம் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் நல்லூர் பிரதேச சபைத் தேர்தலில் மாம்பழம் சின்னத்தில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுகின்றது. இதன் பரப்புரைக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமை கோண்டாவிலில் இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

விகிதாசார முறையில் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலில் ஒவ்வொரு சபைக்கும் நூற்றுக்கணக்கானவர்கள் போட்டியிடுகின்றார்கள். இவர்கள் நண்பர்களாகவும் அயலவர்களாகவும் உறவினர்களாகவும் இருக்கும்போது யாருக்கு வாக்களிப்பதென்று முடிவெடுக்க முடியாத நிலையில் மக்கள் உள்ளனர்.

தேர்தல்களில் வேட்பாளர்களின் தெரிவு நட்புநிலை சார்ந்தும் உறவுநிலை சார்ந்தும் அமைந்தால் ஒருபோதும் தகுதியான வேட்பாளர்களை தெரிவு செய்ய முடியாது. எனவே, மக்கள் தெரிந்தவர்கள், உறவினர்கள் என்ற வட்டங்களையும் தாண்டிச் சிந்தித்துத் தகுதியானவர்களை அடையாளங் கண்டு வாக்களிக்க முன்வரவேண்டும்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்னைகள் இன்னமும் தீர்க்கப்படாத நிலையில் தெரிவுசெய்யப்படுபவர்கள் தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து ஒருபோதும் வழுவாதவர்களாக இருப்பதை வாக்காளர்கள் உறுதிசெய்யவேண்டும் என்றும் கூறினார். (ஐ)

# ஆனல்ட்டுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், பெப். 07

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் தெரிவு சட்டவிரோதமானது என்று அறிவிக்குமாறு கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இமானுவல் ஆனல்ட் யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வராகப் பிரகடனப்படுத்தப் பட்டமை சட்டவிரோதமானது என்று அறிவிக்கக் கோரி, அதனடிப்படையில் அவரின் பதவி நியமனம் குறித்த வர்தமானி அறிவித்தலைச் செல்லுபடியாற்றதாக அறிவிப்பதற்கும், முதல்வராக ஆனல்ட் தொடர்வதற்கு இடைக்காலத் தடை விதிக்குமாறு கோரியும் முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் தரப்பை சேர்ந்த யாழ். மாநகர சபை உறுப்பினர் வ. பார்த்தீபன் தொடுத்துள்ள உறுதிகேள் எழுத்தாணை, யாதுரிமை எழுத்தாணை மற்றும் ஆணையீட்டு எழுத்தாணைக்கான மனு மீதான விசாரணை நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, வழக்கு தொடுநர் தரப்பினரால் சமர்ப்பணங்கள் முன் வைக்கப்பட்டன. எதிர் மனுதாரர்களில் ஒருவரான உள்ளூராட்சி ஆணையார் சார்பில் மன்றில் தோன்றிய அரச தரப்பு சட்டத்தரணி தனக்கு கால அவகாசம் வேண்டும் என கோரியதை அடுத்து வழக்கை எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமைக்கு நீதிபதி ஒத்திவைத்தார். (ஐ)

# அரிசி இறக்குமதிக்கு அவசியமில்லை!


கொழும்பு, பெப். 07

நாட்டில் இந்த வருடம் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்று விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை என அந்தத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், நெல் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல்வேறு பிரச்னைகளை எதிர்கொண்டுள்ளதாக பல பிரதேசங்களிலும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
புதிய முயற்சிகள் இன்று வேண்டாம். தாய்வழி உறவுகளின் மூலம் உதவி கிடைக்கும். மனம் விரும்பும் வகையில் செயல்படுவீர்கள். உங்கள் செயல் ஆதாயம் தரும். நிதிநிலை உயரும்.

**இடபம்**
நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். எதிர்காலம் பற்றி யோசிப்பீர்கள். குடும்பத்தினர் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். வீடு, மனை வாங்கும் சிந்தனை உண்டாகும்.

**மிதுனம்**
செயல்களில் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினர் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். புதிய சொத்து வாங்கும் முயற்சி தள்ளிப்போகும். நீண்ட நாள் எண்ணம் ஒன்று பூர்த்தியாகும்.

**கடகம்**
நினைத்ததை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் எதிர்காலம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். மனதில் தேவையற்ற குழப்பம் உண்டாகும். தந்தை வழி உறவினரால் உங்கள் முயற்சி நிறைவேறும்.

**சிம்மம்**
வீண் செலவு ஏற்படும். குடும்பத்தினர் உங்கள் நிலையைப் புரிந்து கொள்ளாமல் செயல்படுவார்கள். வரவு அதிகரித்தாலும் செலவு கையை மீறிச் செல்லும். செயல்களில் நிதானம் தேவை.

**கன்னி**
எதிர்பார்த்தவை நடந்தேறும். கேட்ட இடத்தில் இருந்து உதவிகள் வந்து சேரும். நெருக்கடிகளில் இருந்து மீள்வீர்கள். மனதிற்கினிய சம்பவத்தால் மகிழ்ச்சி காண்பீர்கள்.

**துலாம்**
நண்பர்கள் உதவி நன்மை தரும். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். உங்கள் முயற்சி ஒன்றில் வெற்றி பெறுவீர்கள். போட்டிகளை சமாளிக்கும் வகையில் வியாபாரத்தில் மாற்றம் செய்வீர்கள்.

**விருட்சிகம்**
உங்கள் அறிவாற்றல் வெளிப்படும். எதிர்பார்த்த வருவாய் வரும். நன்மையான நாள். உங்கள் எண்ணம் நிறைவேறும். குழந்தைகளின் எதிர்காலத்திற்குரிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

**தனுசு**
நீங்கள் நினைப்பதற்கு மாறாக சில செயல்கள் நடைபெறும். எதிரிகளின் கை மேலோங்கும். சிந்தித்து செயல்பட வேண்டிய நாள். எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவிகள் கிடைக்க தாமதமாகும்.

**மகரம்**
மாலை வரை நண்பரின் ஆதரவால் நினைத்ததை அடைவீர்கள். அதன்பின் சங்கடம் தோன்றும். குழப்பங்கள் விலகும். உங்களுக்கு எதிரானவர்களை அடையாளம் காண்பீர்கள்.

**கும்பம்**
செயல்களில் வெற்றி காண்பீர்கள். உடல் நிலையில் இருந்த சங்கடங்கள் விலகும். வாழ்க்கைத் துணையின் வழியே உங்கள் எண்ணம் நிறை வேறும். எதிரிகளின் செயல்களை முறியடிப்பீர்கள்.

**மீனம்**
அவசர வேலைகளால் சங்கடத்திற்கு ஆளாவீர்கள். சிலர் வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள்.மேலதிகாரியின் கண்டிப்பிற்கு ஆளாவீர்கள். வேலைப் பளுவால் உடலும் மனமும் சோர்வடையும்.

# இடைத்தேர்தலில் திடீர் திருப்பம்; பன்னீர் அணி வேட்பாளர் வாபஸ்!

சென்னை, பெப். 07

ஈரோடு இடைத்தேர்தலில் தங்கள் தரப்பு வேட்பாளர் செந்தில் முருகன் வாபஸ் பெறுவார் என்று ஓ. பன்னீர் செல்வம் அணி சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் அறிவிக்கப் பட்டு வேட்புமனு தாக்கல் நடைபெற்று வருகிறது. இந்தத் தேர்தலில் அ. தி. மு. க. சார்பில் எடப்பாடி பழனிசாமி, ஓ. பன்னீர்செல்வம் ஆகியோர் தனித்தனியே வேட்பாளர்களை அறிவித்தனர். மனு தாக்கல் செய்வதற்கு இன்றைய தினமே இறுதிநாளாகும்.

இதனிடையே, பழனிசாமி தரப்பில், அ. தி. மு. கவின் இரட்டை இலை சின்னத்தை தனது தரப்பு வேட்பாளருக்கு ஒதுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக்கோரி உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டது. இதில், இரு தரப்பினரும் கலந்துபேசி, அவைத்தலைவர் தமிழ்மகன் உசேன் தலைமையில் பொதுக் குழு மூலமாக வேட்பாளரை தேர்வு செய்யுமாறு உத்தர விடப்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழ்மகன் உசேன் அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களுக்கும் கடிதம் அனுப்பி இருந்தார்.

இந்நிலையில் ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தலுக் கான வேட்பாளர் அறிவிப்பில் அ. தி. மு. க. அவைத் தலைவர் தமிழ்மகன் உசேனின் செயல் பாடு சட்டவிரோதமானது என்று பன்னீர்செல்வம் தரப் பைச் சேர்ந்த பண்ருட்டி ராமச் சந்திரன், வைத்திலிங்கம் ஆகி யோர் தெரிவித்தனர். இந் நிலையில் அ. தி. மு. க. அவைத் தலைவர் தமிழ்மகன் நேற்று மாலை அ. தி. மு. க. பொதுக்குழு உறுப்பினர்கள் தந்த வேட்பாளர் ஒப்புதல் படி வங்களை தேர்தல் ஆணை யத்தில் சமர்ப்பித்தார்.

இந்நிலையில் ஈரோடு இடைத்தேர்தலில் வேட்பாளர் செந்தில் முருகன் வாபஸ் பெறுவார் என்று பன்னீர்செல் வம் அணி சார்பில் அறிவிக்கப் பட்டுள்ளது. இது குறித்து அந்த அணியைச் சேர்ந்த முன் னாள் அமைச்சர் கு. ப. கிருஷ்ணன் செய்தியாளர்களி டம் கூறுகையில்,

"ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் இருந்து எங்கள் தரப்பு வேட்பாளர் செந்தில் முருகன் வாபஸ் பெறுகிறார். இரட்டை இலை வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்தில் எங்கள் தரப்பு வேட்பாளர் செந்தில் முருகன் வாபஸ் பெறுகிறார். ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் இரட்டை இலை வெற்றி பெற பிரசாரம் செய்வோம். தென்னரசுவுக்கு அல்ல. பழனிசாமி அறிவித்த வேட்பாளருக்கு பிரசாரம் இல்லை. இரட்டை இலைக்கு வாக்களிக்க பிரசாரம் செய் வோம்." இவ்வாறு அவர் கூறி னார்.

# மோடி மீண்டும் பிரதமரானால் இந்த நாடு என்னவாகும்?

## திருமாவளவன் கேள்வி



சென்னை, பெப். 07

மீண்டும் ஒருமுறை மோடி பிரதமரானால் இந்த நாடு என்ன ஆகும் என்பதுதான் நம் முன்னால் இருக்கின்ற கேள்வி என திருமாவளவன் தெரிவித் துள்ளார்.

குஜராத் கலவரம் தொடர்பாக பி. பி. சி. தயாரித்த ஆவணப்படம் தமிழாக்கம் செய் யப்பட்டு, விடுதலை சிறுத் தைகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் திரையிடப் பட்டது. அப்போது மேடை யில் பேசிய விடுதலை கட்சி யின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான திருமாவள வன் தெரிவித்ததாவது.

"வெறுப்புணர்வின் உச்சத் தில் உள்ள மோடியிசம் பி. பி. சி. நிறுவனத்தால் அம்பலப் படுத்தப்பட்டுள்ளது. குஜராத் வன்முறைக்கு பின்னால் சங்பரிவார் அமைப்புகளும் பாஜகவும் இருந்திருக்கிறது என்பதை பி. பி. சி. ஆவணப் படம் வெளிக்கொண்டு வந்துள்ளது.

சிறுபான்மையினர் வெறுப்பை தூண்டி, மோடி மாநில அரசியலில் இருந்து தேசிய அரசியலுக்கு வந்துள்ளார் . மீண்டும் ஒரு முறை மோடி பிரதமரானால் இந்த நாடு என்ன ஆகும் என்பதுதான் நம் முன்னால் இருக்கின்ற கேள்வி.

சிலர் இதை கண்டு கொள் ளாமல் திமுக எதிர்ப்பையும், திராவிடர் கழகத்தையும் எதிர்த்து கொண்டு இருக் கின்றனர். நம் முன்னால் மிக மிக சவாலாக இருப்பது மோடியின் அரசியல் தான். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் மொழி வழி அரசியல் பெரிதாக பேசப் படுவதில்லை. அதனால்தான் தமிழ்நாட்டில் சனாதன எதிர்ப்பு அரசியல் வலுவாக இருக்கிறது.

காதல், மதமாற்றம், புனித பசு என்ற பெயரில் அவர்கள் செய்யும் வன்முறைகள் தான் மோடியை இந்த அளவிற்கு வலிமையாக உருவாக்கி யுள்ளது. மதசார்பின்மை என்ற ஒற்றை வார்த்தைக்காக ஒருவர் முதன்முதலில் கொல் லப்பட்டார் என்றால் அது காந்தியடிகள்தான்.

தி. மு. கவையும், திராவி டத்தையும் எதிர்ப்பது தமிழ் தேசியம் அல்ல. மாறாக அது திரிபுவாதம். அப்படி செய்வது சனாதனத்திற்கு துணை போவ தற்கு சமம். பெரியாரை எதிர்ப் பது தமிழ் தேசியம் அல்ல, சனாதனத்தை எதிர்ப்பதுதான் தமிழ்த் தேசியம் - என்றார்.

(ஐ)

# கலைஞரின் நினைவுசின்னமான பேனா தமிழ்நாட்டின் எழுத்தின் அடையாளம்!

இராமேஸ்வரம், பெப். 07

கலைஞரின் பேனா, தமிழ் நாட்டின் எழுத்தின் அடை யாளமாக இருக்கிறது என்று ம. தி. மு. க. பொதுச் செயலா ளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இராமேஸ்வரத்தில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற அவர் பின் னர் செய்தியாளர்களை சந்தித்துப் பேசினார்.

இதன்போது, "கடலுக்குள் கலைஞரின் பேனா நினைவுச் சின்னம் அமைப்பதற்கு சிலர் பொறாமையால் எதிர்ப்பு தெரிவிப்பதாக கூறினார்.



அவ்வாறான எதிர்ப்புகளை பொருட்படுத்த வேண்டாம் என்று தெரிவித்த அவர், நர்மதை ஆற்றின் நடுப்பகுதி யில் சர்தார் வல்லப்பாய் படே லுக்கு எப்படி மிகப் பெரிய சிலை வைத்தார்கள் என்றும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார் களா என்றும் கேள்வி எழுப்பி னார்.

காலத்தால் அழியாத காவி யங்களை தீட்டிய கலைஞரின் பேனா முனை என்பது வர லாற்றை தீட்டியது என்றும், காவியங்களை தீட்டியது என் றும், கவிதைகளை தீட்டியது என்றும் வைகோ புகழாரம் சூட்டினார். மேலும் மறைந்த முன்னாள் முதலமைச்சர் கலை ஞர் கருணாநிதியின் பேனா, தமிழ்நாட்டின் எழுத்தின் அடையாளமாக இருக்கிறது என்றும் குறிப் பிட்டார். (ஐ)

# நிதி நெருக்கடி மிக உக்கிரம்!

## அத்தியாவசிய தேவைகளை முகாமை செய்வதில் நெருக்கடி



கொழும்பு, பெப். 07

**பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் நாட்டுக்குத் தேவையான நிதியை பெற்றுக் கொடுப்பதில் நிதி அமைச்சு மிக இக்கட்டான முகாமைத்துவத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில ளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்களுக்கு அத்தியாவசிய தேவை ஸ்ரீகளுக்கான நிதியை விநியோகிப்பதில் நிதி அமைச்சின் அதிகாரிகள் பெரும் அர்ப்ப ணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

அதேவேளை, ஏனைய அனைத்து அமைச்சுக்களின் செலவினங்களை முகாமைத்துவம் செய்வதில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு ஒழுங்குபடுத்தல் மூலம் அந்த செலவி னங்களை முகாமைத்துவம் செய்யுமாறு பல்வேறு தரப்புகளும் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன - என்றார்.

(அ)

## சிற்றுண்டி விலை மாற்றம் இல்லை

கொழும்பு, பெப். 07

சமையல் எரிவாயு விலை அதிகரித்த போதிலும், தமது உற்பத்திகளின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படமாட்டாது என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் உறுப்பினர்களிடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

இதேவேளை, லிட்ரோ எரிவாயு நிறுவனம் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிவாயு விலையை அதிகரித்துள்ளது.

(அ)

## டிஜிற்றல் மயமாக்கப்படும் இலங்கையின் கடவுச்சீட்டு!

கொழும்பு, பெப். 07

கடவுச்சீட்டுகளை டிஜிட்டல் மயப்படுத்தும் நடவடிக்கைகள் அடுத்தாண்டு மார்ச் மாதத்துக்குள் நிறைவடையவுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2017ஆம் ஆண்டு இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் பல்வேறு காரணங்களுக்காக அந்த பணிகள் தாமதித்துள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உலக நாடுகள் மத்தியில் இலங்கையின் கடவுச் சீட்டுக்கு மதிப்பேற்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கான மென்பொருளை உருவாக்குவதற்கான கேள்வி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாகவும், 8 மாதங்களுள் இந்த பணிகள் நிறைவு செய்யப்படும் எனவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## விவசாயப் பயிர்கள், மசாலாப் பொருட்கள் ஏற்றுமதி மூலம் ரூ.16,000 கோடி வருமானம்!

கொழும்பு, பெப். 07

ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் கூற்றுப்படி, 2022 ஆம் ஆண்டில் விவசாய பயிர்கள் மற்றும் மசாலாப் பொருட்களின் ஏற்றுமதி மூலம் 455.73 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அல்லது 16,000 கோடி ரூபாவுக்கும் அதிகமான அந்நியச் செலாவணி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜானக லிந்தர, திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த சில தசாப்தங்களாக வாசனை திரவியங்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் இலங்கைக்கு பாரிய அளவிலான அந்நியச் செலாவணியை ஈட்ட முடிந்துள்ளது.

2022 ஆம் ஆண்டில், மசாலாப் பொருட்களின் ஏற்றுமதி மூலம் 1,60,000 மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்ட முடிந்தது. 50 வருட வரலாற்றைக் கொண்ட விவசாயத் திணைக்களத்தின் வரலாற்றில் அதிக ஏற்றுமதி வருமானம் 2021 ஆம் ஆண்டு ஈட்டப்பட்டது.

2022 ஆம் ஆண்டு இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருந்தபோது விவசாயப் பயிர்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதி மூலம் 455.73 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக வெளிநாடுகளில் இலங்கையின் இலவங்கப் பட்டைக்கு அதிக கிராக்கி உள்ளது. 18,600 மெற்றிக் தொன் இலவங்கப்பட்டை மற்றும் உலர் இலவங்கப்பட்டை இலைகள் ஏற்றுமதி செய்யப்பட்டு 217.50 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளது.

மேலும், 2022இல் 1856.71 மெற்றிக் தொன் கராம்பு ஏற்றுமதி மூலம் 18.03 மில்லியன் டொலர் வருமானமும், 2.14 மெற்றிக் தொன் ஏலக்காய் ஏற்றுமதி மூலம் 0.14 மில்லியன் டொலர்களும், ஏற்றுமதி மூலம் 1978.89 மெற்றிக் தொன் வருமானமும்,ஜாதிக்காய் மூலம் 12.75 மில்லியன் டொலர்கள் வருமானமும் கிடைத்துள்ளது.

இதற்கமைய, 2023ஆம் ஆண்டில் 600 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணி வருமானத்தை ஈட்ட எதிர்பார்க்கப்படுகின்றது-என்றார்.(அ)

## உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர் எண்ணிக்கையை குறைக்கத் திட்டம்!

கொழும்பு, பெப். 07

உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர் எண்ணிக்கையை 5,100 வரை குறைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக எல்லை நிர்ணயத்திற்கான தேசிய சபை தெரிவித்துள்ளது.

தற்போது உள்ளூராட்சி மன்றங்களில் 8,000 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர்.

இதனிடையே குழுக்கள் ஊடாக மாவட்ட மட்டத்தில் வழங்கப்பட்ட பரிந்துரைகள், பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் மற்றும் தமது சபையின் பரிந்துரைகளை ஆராய்ந்து மாவட்ட மட்டத்திலான எல்லை நிர்ணய நடவடிக்கைகள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென எல்லை நிர்ணயத்திற்கான தேசிய சபையின் தலைவர் மகிந்த தேசப்ரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை உள்ளிட்ட 13 மாவட்டங்களுக்குச் சென்று தமது அறிக்கைக்கான இறுதித் திட்டங்களைப் பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

பொலன்னறுவை, கண்டி, நுவரெலியா உள்ளிட்ட 12 மாவட்டங்களின் முன்மொழிவுகள் எதிர்வரும் காலங்களில் பெற்றுக்கொள்ளப்படும் என எல்லை நிர்ணயத்திற்கான தேசிய சபையின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

மார்ச் மாத இறுதிக்குள் தமது இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

(அ)

## இலங்கைக்குப் பயணம் செய்வதற்கு எதிராக நியூஸிலாந்து மக்கள் அறிவுறுத்தப்படவில்லை

கொழும்பு, பெப். 07

இலங்கைக்கு பயணம் செய்வதற்கு எதிராக நியூஸிலாந்து மக்கள் அறிவுறுத்தப்படவில்லை என நியூசிலாந்து வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவட் மைக்கல் எப்லெட்டன் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு சர்வதேச சுற்றுலாத்துறை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நியூசிலாந்து அங்கீகரித்துள்ளது.

ஒரு குறிப்பிட்ட நாடு அல்லது பிராந்தியத்திற்குச் செல்வதற்கு எதிராக நியூசிலாந்து மக்களுக்கு இரண்டு வகையான பயண ஆலோசனைகள் உள்ளன.

"பயணம் செய்ய வேண்டாம்" "அத்தியாவசிய மற்ற பயணத்தைத் தவிர்க்கவும்" என்பதே அவையாகும்.

தற்போது 50க்கும் மேற்பட்ட நாடுகளில் இந்த வகையான பயண ஆலோசனைகள் உள்ளன.

எனினும் அதில் இலங்கை உள்ளடங்கவில்லை. மாறாக, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளை உள்ளடக்கிய மிகப் பெரிய நாடுகளின் வரிசையில் இலங்கை இருப்பதாக தூதுவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் நியூசிலாந்து மக்கள் "அதிக எச்சரிக்கையுடன் செயல்படவேண்டும் "என்பதையே தாம் அறிவுறுத்தியதாக தூதுவர் மைக்கல் எப்லெட்டன் குறிப்பிட்டார்.

இலங்கைக்கான நியூசிலாந்தின் பயண ஆலோசனைகள் அண்மையில் "இறுக்கப்பட்டுள்ளன" என்று ஒரு செய்தி தவறாகப் பிரசுரிக்கப்பட்டமை தொடர்பிலேயே இந்த விளக்கத்தை நியூஸிலாந்து தூதரகம் வழங்கியுள்ளது.

(அ)

## தந்தையும் 2 பிள்ளைகளும் வீட்டில் சடலங்களாக மீட்பு!

கொழும்பு, பெப். 07

அரநாயக்க, கொடிகமுவ பிரதேசத்தில் தூக்கிட்டு உயிரை மாய்த்துக் கொண்டதாக கருதப்படும் நபரொருவரின் சடலமும் அதற்கு அருகிலிருந்து இரு சிறுவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரை மாய்த்துக்கொண்டதாகக் கருதப்படும் நபர் 33 வயதான ஒருவரெனவும், ஏனைய சிறுவர்கள் இருவரும் 6 மற்றும் 9 வயதுடைய அவரின் பிள்ளைகள் என்றும் தெரியவந்துள்ளது.

சிறுவர்கள் இருவரும் கொலை செய்யப்பட்டிருப்பதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த சிறுவர்கள் இருவரையும் கொலை செய்த பின்னர் அவர்களின் தந்தை உயிரை மாய்த்துக்கொண்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# ஒருவரை ஒருவர் குறை கூறும் பிரசாரத்தை நிறுத்தவேண்டும்!

## மாவை சேனாதிராசா அழைப்பு




அம்பாறை, பெப். 07

**“தமிழ் தேசிய பரப்பில் ஒருவரையொருவர் குறை கூறி வசை பாடும் பிரசாரத்தை நிறுத்தவேண்டும். தமிழ் தேசியத்தின் அடிப்படையில் ஏனைய கட்சிகளையும் ஒன்றிணைத்து செயல்படவேண்டும்.”**

- இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா காரைதீவில் தெரிவித்தார்.

காரைதீவு பிரதேச சபைக்கான தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை விபுலானந்த கலாசார மண்டபத்தில் காரைதீவு கிளைச் செயலாளர் க.செல்வப்பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், எம்ஏ. சுமந்திரன், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு மாவை சேனாதிராசா மேலும் தெரிவிக்கையில்-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்டமைப்பின் கீழ் தமிழரசுக் கட்சி சின்னத்தின் கீழ் அனைவரும் செயல்பட்டதால் கடந்த அனைத்து தேர்தல்களிலும் நாங்கள் வெற்றிவாகை சூடி வந்தோம். இம் முறை தமிழரசுக்கட்சி அதே சின்னத்தில் தேர்தலில் களமிறங்கி உள்ளது. நாங்கள் மேலும் மேலும் வசைபாடி கட்சிகளை பிரிக்காமல் ஒற்றுமையாக செயல்படவேண்டும்.

ஊராட்சி சபைகளில் நாம் ஆட்சி அமைக்கின்றபொழுது எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சிகளை மாத்திரம் அல்ல சுயேச்சை அணிகளை மாத்திரமல்ல தேவையேற்படின் அரச கட்சி என்றாலும் அவர்களை அரவணைத்து நாங்கள் நட்புரிமையோடு இணைந்து செயல்பட வேண்டும் . அவர்களை வேறுபடுத்தி எதிரியாக பார்க்கக் கூடாது.

இம்முறை தேர்தல் பலத்த சவாலாக அமையப் போகின்றது.

எனவே நாம் தமிழ் தேசியத்தின் அடிப்படையில் ஒன்று இணைந்து தேர்தலில் நின்று அறிவையும் தொழில்நுட்பத்தையும் இணைத்து ஆட்சி அமைக்கவேண்டும். யாரையும் பிரித்து பார்த்தல் கூடாது.

எமது கட்சியில் இம்முறை இளைஞர்கள்,பெண்கள், புதியவர்கள் என பல சாராரும் தேர்தலில் நிற்கின்றார்கள்.

எமது ஒட்டுமொத்த சமஷ்டிக் கட்டமைப்பில் அடிப்படையானது ஊராட்சி மன்றம்.

இந்த ஊராட்சி மன்றத்தில் இருப்பவர்கள் ஊடாக எமது தேசியத்தை கட்டி எழுப்ப வேண்டும். முழுமையாக வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வுடனான மீளப் பெற முடியாத சமஷ்டியை நாங்கள் எதிர்பார்த்து நிற்கின்றோம். அதற்கான அடித்தளமே ஊராட்சி மன்றமாகும்.

இன்றைய பொருளாதார நெருக்கடியில் இலங்கை அரசாங்கம் எமது பிரதேச புலம் பெயர் தமிழ்மக்களது உதவியை நாடி நிற்கிறது.

நாம் இந்த ஊராட்சி சபைகள் ஊடாக அவர்களது வாழ்க்கை தரத்தை உயர்த்த வேண்டும். அவர்களது உதவியை பெற வேண்டும் .

நாட்டின் போர் சூழலாலும் இன்னும் பல்வேறு காரணங்களாலும் சுமார் 12 லட்சம் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள். பொருளாதார நெருக்கடி மிகுந்த இன்றைய கால கட்டத்தில் அரசாங்கம் அவர்களது உதவியை நாடி நிற்கின்றது .வடக்கு கிழக்கில் அதிகாரத்தை பகிர்ந்து சமஷ்டிக்கான அடித்தளத்தை இடுகின்ற பொழுது அவர்களது உதவி நாட்டுக்கு கிடைக்கும். அதனிடையே ஊராட்சி மன்றத்துக்கான உதவிகளை நாங்கள் ஒற்றுமைப்பட்டால் அவர்களிடமிருந்து பெற்று எமது மக்களுக்கு சேவை செய்யலாம். மக்களையும் சிறந்த வாழ்க்கைக்கு மாற்ற வேண்டும் .

எனவே இலங்கை தமிழரசி கட்சியை வழமைபோல இம் முறையும் வெற்றியடையச் செய்ய நீங்கள் அனைவரும் கைகோர்க்க வேண்டும் - என்றார். (அ)

# வயாவிளான் மானம்பிராய் பிள்ளையார் கோயிலில் பூசை வழிபாடுகளுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், பெப். 07

நீண்டகாலமாக உயர்பாதுகாப்பு வலயத்தை காரணம் காட்டி பூசை வழிபாடுகளுக்கு தடுக்கப்பட்டு வந்த வயாவிளான் மேற்கு மானம்பிராய் பிள்ளையார் கோயிலில் பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் நேற்று முன்தினம் முதல் பொது மக்கள் வழிபாட்டுக்காக அனுமதிக்கப் பட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள குறித்த ஆலயத்திற்கு பக்தர்கள் சென்றுவர ஆரம்ப காலங்களில் அனுமதி கொடுக்கப்பட்டு வந்தபோதிலும் பின்னர் பாதுகாப்பு விடயங்களை காரணம் காட்டி மறுக்கப்பட்டது.

இந்நிலையில், ஆலய நிர்வாகத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்த தமது பூர்வீக ஆலயத்தில் பூசை வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதி பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.



இதற்கிணங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதுகாப்பு உயரதிகாரிகளுடன் குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி பொதுமக்கள் பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இதனடிப்படையில், இந்துக்களின் சிறப்பு நாளான தைப்பூச தினமான நேற்று ஆலயத்திற்கு பக்தர்கள் செல்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்டதற்கிணங்க தைப்பூச வழிபாடுகள் மற்றும் சிறப்பு பொங்கல் நிகழ்வுகளை பொதுமக்கள் முன்னெடுத்திருந்தனர். (அ)

# திருகோணமலை நோக்கி நேற்று ஆரம்பமான பேரணி







முல்லைத்தீவு, பெப். 07

பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி முன்னெடுக்கப்படும் பேரணி நேற்று முல்லைத்தீவிலிருந்து திருமலை நோக்கி பயணத்தை ஆரம்பித்தது.

தமிழர் தேசம் மீதான ஆக்கிரமிப்புக்கு எதிரான பேரணியின் மூன்றாவது நாளான நேற்று பேரணி ஆரம்பமானது.

திருகோணமலை நோக்கிச் செல்லும் இந்தப் பேரணி கொக்கிளாய் வீதி வழியாக சென்று அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன் பின்னர் ஆக்கிரமிப்புக்குள்ளான நீராவியடி ஆலயத்தில் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. (அ)

# கசிப்புடன் இரண்டு பேர் கிளிநொச்சியில் கைது

கிளிநொச்சி, பெப். 07

கிளிநொச்சியில் 80 போத்தல் கசிப்பை கொண்டு சென்ற இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் கிளிநொச்சி தருமபுரம் பகுதியிலிருந்து புதுக்குடியிருப்பு பகுதிக்கு கொண்டுச் சென்றபோதே குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தரமபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஏ-35 வீதியின் நெத்தலியாற்றுப் பகுதியில் நேற்று முன் தினம் அதிகாலை பொலிஸார் விசேட வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, தர்மபுரத்தில் இருந்து புதுக்குடியிருப்புப் பகுதிக்கு பொலித்தின் பையில் பொதி செய்யப்பட்டு, மோட்டார் சைக்கிளில் கொண்டு செல்லப்பட்ட 80 போத்தல் கசிப்பை கைப்பற்றினர்.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதுடன், குறித்த குற்றச் செயலுக்காக பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் மீட்டுள்ளனர். (அ)

# தமிழரின் வாக்குகளை அபகரிக்க ரணில் சதி!

## நளின் பண்டார குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 07

**எதிர்கால ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை அபகரிப்பதற்காகவே அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் பற்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார குற்றம் சாட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வுக்காக அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தேவை என்ற நிலைப்பாட்டில் நாம் இருக்கின்றோம்.

13ஐ நடைமுறைப்படுத்துவதற்கு முன் அந்த 13இற்குள் இருக்கின்ற மாகாண சபைகளுக்கான தேர்தலை முதலில் நடத்த வேண்டும்.

இந்நிலையில் நீண்ட காலமாக தேர்தல் நடத்தப்படாமல் இருக்கின்றது.

எதிர்கால ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து, தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக அவர்களின் வாக்குகளை அபகரிப்பதற்காகவே 13ஆவது திருத்தச் சட்டம் பற்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசுகின்றார்.

இதற்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்கின்றோம். இதற்காகத்தான் நாம் கடந்த சர்வ கட்சிக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை - என்றார். (அ)

# தொடர்ந்து பதவி விலகி வரும் வானூர்தி கட்டுப்பாட்டாளர்கள்

கொழும்பு, பெப். 07

இலங்கை வானூர்தி போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள், தமது செயற்பாடுகளின் திறன் குறைந்து வருகின்றமை தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அந்த சங்கத்தின் கூற்றுப்படி, அவர்களில் 19 பேர் ஒரு வருட காலத்திற்குள் பதவி விலகியுள்ளனர்.

இதன் காரணமாக இலங்கையில் செயல்படும் வானூர்தி, போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவில் உள்ளது.

இந்தநிலையில் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர் திசர அமரானந்த, மேலும் நான்கு அல்லது ஐந்து கட்டுப்பாட்டாளர்கள் வெளியேறினால் பணிப்புறக்கணிப்பு இல்லாவிட்டாலும் வானூர்திப் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடையும் என்று எச்சரித்துள்ளார்.

இந்த நிலையில் சர்வதேச வானூர்தி போக்குவரத்து அமைப்பின் ஊடாகவே வானூர்தி போக்குவரத்து சேவைகளை நாட்டுக்கு வழங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது இலங்கையின் வான்வெளியை அயல் நாட்டிற்கு இழக்க நேரிடும்.

எனவே இந்த பிரச்னைக்கு தீர்வு காண ஜனாதிபதி, உடனடியாக தலையிடவேண்டும் என்று இலங்கை வானூர்தி போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் சங்கத் தலைவர் கோரிக்கை விடுத்தார். (அ)

# உள்ளூராட்சி தேர்தல் நடக்குமா? அரசின் முடிவு நாளை தெரியும்

கொழும்பு, பெப். 07

உள்ளூாராட்சி சபைத் தேர்தல் நடக்குமா, இல்லையா என்ற முடிவை அரசாங்கம் நாளை அறிவிக்கும் என அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாளை புதன்கிழமை விசேட அறிவிப்பொன்றை நிதி அமைச்சு பாராளுமன்றில் விடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதாவது, தேர்தலுக்காக 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டுள்ளபோதிலும், தற்போதையை பொருளாதார நிலைமையின் கீழ் தேர்தலுக்கு வழங்குவதற்குப் பணம் இல்லை என்றே அந்த அறிவிப்பு அமையப் போகின்றது என உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதனை அடிப்படையாக வைத்து தேர்தல் நடக்குமா, இல்லையா என்ற அறிவிப்பை அரசாங்கம் விடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹெரோயின் வர்த்தகத்துக்கு உதவிய பொலிஸார் கைது!

கொழும்பு, பெப். 07

ஹெரோயின் வர்த்தகத்துக்கு உதவிபுரிந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், போதைப்பொருள் வர்த்தகர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் இருவரும் கேகாலை - பண்டாரநாயக்க பகுதியில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் வரக்காபொல பொலிஸ் நிலையத்தில் கடமை புரிபவர் என்பதுடன், மற்றொரு சந்தேகநபர் திஸ்ஸமஹாராம பகுதியைச் சேர்ந்தவராவார்.

சந்தேகநபர்கள் தம்வசம் வைத்திருந்த ஹெரோயின் போதைப்பொருளுக்கு மேலதிகமாக, 7 வங்கி ஏ.ரிம் அட்டைகள், 4 வங்கி கணக்கு புத்தகங்கள், 3 சிறப்பு அங்காடிகளில் கொள்வனவுக்காக பயன்படுத்தும் அட்டைகள் மற்றும் 8 கைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஹெரோயின் போதைப்பொருளுடன் பண்டாரவளை பகுதியில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர்.

பண்டாரவளை பஸ் நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் தெரிவித்துள்ளது. (அ)

# எம்.பிக்களின் 2 மாத சம்பளத்தை எடுத்தாவது தேர்தல் நடத்துங்கள்!

## ராதா எம்.பி. கோரிக்கை



கொழும்பு, பெப். 07

உள்ளூாராட்சி மன்றத் தேர்தலை நடத்த பணம் இல்லை என்றால், எம்.பி.க்களின் இரண்டு மாத சம்பளத்தை நிறுத்தி வைத்து, அந்த பணத்தை தேர்தலுக்கு பயன்படுத்துமாறு வே.இராதாகிருஷ்ணன் அரசுக்கு கோரிக்கை வைத்தார்.

மேலும், இந்தத் தேர்தலை நடத்துவதற்கு பணம் வழங்காமல் தேர்தலை நடத்தாமல் இருக்க அரசாங்கம் முயற்சிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார். (அ)

# தவறுகளை தட்டிக்கேட்டால் அடக்குமுறைகள் பிரயோகம்

## ரிஷாத் பதியுதீன் சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப். 07

அரசாங்கம் இழைக்கும் தவறுகளை ஜனநாயக வழியில் தட்டிக்கேட்கும்போது, அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக அடக்குமுறை பிரயோகிக்கப்படுவதாகவும் இதனை நிறுத்தி மக்களின் கருத்துக்களுக்கு செவிசாய்க்குமாறும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியா, சாளம்பைக்குளத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

கடந்த ஆட்சியாளர்கள் நாட்டின் பொருளாதாரத்தின் நிலையை மாற்றியதனால் நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்று இன்று மக்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டி ருக்கிறார்கள். மக்கள் எதிர்நோக்குகின்ற கஷ்டங்களை வெளிப்படுத்துவதற்காக வீதியிலிறங்கி, ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை முன்னெடுக்கின்றபோது, அவர்களை அடக்கி, ஒடுக்கி மிக மோசமான முறையில் தாக்குதல்கள் நடத்தப்படுவதை இன்று காணக்கூடியதாக உள்ளது.

மக்களுடைய ஜனநாயகக் குரல் இவ்வாறு நசுக்கப்படுகின்றபோது, எதிர்காலத்தில் நாட்டிலே பாரிய ஆபத்துக்கள் ஏற்படலாம் என்ற ஐயம் நிலவுகின்றது.

எனவே, ஆட்சியாளர்கள் நாட்டு மக்களுடைய உண்மையான நிலையை உணர்ந்து, தற்பொழுது முன்னெடுத்துச் செல்கின்ற நடவடிக்கைகளை நிறுத்தி, மக்களுடைய நலனுக்கான திட்டங்களை வகுத்துச் செயல்பட வேண்டும் என்று வேண்டுகின்றோம்.

உயர்தரப் பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் கூட மின்சாரம் துண்டிக்கப்படுவதனால் மாணவர்கள் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

இதேபோன்று, இன்னும் எத்தனையோ விடயங்களில் அரசாங்கம் தவறிழைத்துக் கொண்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் ஜனநாயக ரீதியில் தட்டிக்கேட்கும்போது, அவர்களுக்கு எதிராக மிக மோசமான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். அவற்றை பார்க்கின்றபோது மிகவும் வேதனையாக இருக்கின்றது - என்றார். (அ)

# இரட்டைப் பிரஜா உரிமை பெற்றுள்ள எம்.பிக்களின் விவரம் கேட்கும் பவ்ரல்

கொழும்பு, பெப். 07

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரட்டை பிரஜா உரிமை உள்ளவர்கள் தொடர்பான தகவல்களை இரண்டு வாரங்களுக்குள் அறிவிக்குமாறு தகவல் அறியும் ஆணைக்குழு குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்-

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரட்டை பிரஜா உரிமை உள்ள உறுப்பினர்கள் தொடர்பான தகவல்களை குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் வழங்குமாக இருந்தால் அது தொடர்பில் நீதிமன்றத்தின் உதவியை நாடுவோம்.

இது தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்திருந்த மேன்முறையீடு கடந்த வாரம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் குறித்த அதிகாரிகளால் வழங்கப்படும் பதிலுக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அத்துடன் இரட்டை பிரஜா உரிமை உள்ளவர்கள் நாட்டில் இருப்பது தொடர்பில் எந்த பிரச்னையும் இல்லை.

ஆனால் அவர்கள் நாட்டில் தீர்மானம் எடுக்கும் இடங்களில் பதவி வகிப்பது பொருத்தமில்லை. அது எமது நாட்டின் இறையாண்மைக்கு பாதிப்பாகவும் அமையும். நாட்டில் சட்டம் இயற்றும் பாராளுமன்றத்தில் இவர்கள் பூரண நம்பிக்கையுடன் செயற்படுவார்களா என்ற சந்தேகம் எழுகின்றது - என்றார். (அ)

# பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியை கொண்டு வந்த முன்னாள் அதிபர்

# பர்வேஸ் முஷாரப் காலமானார்



பாகிஸ்தானில் ராணுவ சதிப் புரட்சிக்குப் பிறகு பதவிக்கு வந்த முன்னாள் ராணு வத் தலைவரும் முன்னாள் ராணுவத் தளபதியுமான ஓய்வுபெற்ற ஜெனரல் பர்வேஸ் முஷாரப், சில காலமாக உடல் நலக் குறைவால் அவதிப் பட்டு வந்த நிலையில் தனது 79வது வயதில் துபாயில் காலமானார்.

அவரது மறைவுக்குப் பிறகு உடனடியாக வெளியிடப்பட்ட அறிக்கையில் உள்சேவைகளுக்கான மக்கள் தொடர்புத்துறை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளது.

முன்னாள் ராணுவ அதிபரின் குடும்பத்தினரும் அவர் அமிலாய்டோசிஸ் என்ற நோயால் பாதிக்கப்பட்டு இருந்ததாகத் தெரிவித்துள்ளனர். இந்த நோயினால், உடலிலுள்ள புரத மூலக் கூறுகள் செயலிழந்து, நோயாளியின் உறுப்புகள் பாதிக்கப்படுகின்றன.

2016ஆம் ஆண்டு மருத்துவ சிகிச்சைக்காக நீதிமன்றத்தில் ஜாமீன் பெற்ற பர்வேஸ் முஷாரப் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் வசித்து வந்தார்.

### ஏற்ற இறக்கமான வாழ்க்கை

பாகிஸ்தானின் கடைசி ராணுவ சர்வாதிகாரியாக அறியப்படும் பர்வேஸ் முஷாரபின் வாழ்க்கை கடந்த இருபது ஆண்டுகளாக பல ஏற்ற இறக்கங்களைக் கொண்டிருந்தது.



1999இல் நாட்டில் ஆட்சியைப் பிடித்த பிறகு, அவர் பல கொலை முயற்சிகளில் இருந்து தப்பித்து, மேற்கத்திய உலகுக்கும் இஸ்லாமிய போராளிகளுக்கும் இடையிலான சண்டையில் முன்னணியில் இருந்தார்.

ஆனால், அவரது அரசியல் கட்சி 2008 தேர்தலில் தோல்வியடைந்தது. நாட்டின் அரசமைப்பை சட்ட விரோதமாக இடைநீக்கம் செய்ததாகவும் அவசரகால நிலையை விதித்ததாகவும் அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது.

அவர் ஆட்சிக்கு வந்த 20 ஆண்டுகளுக்குப் பிறகு, அர சமைப்பை மீறியதற்காக நீதிமன்றம் அவருக்கு மரணதண்டனை விதித்தது.

பர்வேஸ் முஷாரப் ஆகஸ்ட் 11, 1943ஆம் தேதியன்று டில்லியில் உருது பேசும் குடும்பத்தில் பிறந்தார். அவரது பெற்றோர் 1947 இல் இந்திய பிரிவினைக்குப் பிறகு பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்தனர்.

ராணுவத்தில் நீண்ட காலம் பணியாற்றிய பிறகு, 1998 இல் அப்போதைய பிரதமர் நவாஸ் ஷெரீப், முஷாரபை ராணுவ தலைமை அதிகாரியாக நியமித்தார். அடுத்த ஆண்டே முஷாரப் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கவிழ்த்தார்.

ஒப்பீட்டளவில் மூத்த ஜெனரல்களுக்கு முன்னுரிமை அளித்து பர்வேஸ் முஷாரபுக்கு ராணுவ தலைமை வழங்கப்பட்டது. அவரைத் தேர்வு செய்தது நவாஸ் ஷெரீபுக்கு சிக்கலாகி விட்டது.

நாட்டின் பொருளாதார நெருக்கடி, சர்ச்சைக்குரிய சீர்திருத்தங்கள், காஷ்மீர் நெருக்கடி போன்ற காரணங்களால் நவாஸ் ஷெரீப் புகழ் அந்த நேரத்தில் சரிந்து கொண்டிருந்தது. அந்த ஆண்டு காஷ்மீரில் சில பகுதி களை ஆக்கிரமிக்க முயன்று தோல்வியுற்றதால் பாகிஸ்தான் வெட்கப்பட்டது. மேலும், அனைத்து பழிகளும் ராணுவம் மீது விழுந்தது.

ராணுவ ஜெனரல் முஷாரபை மாற்ற நவாஸ் ஷெரீப் விரும்பியபோது, அப்போதைய ராணுவ தளபதி மிகவும் சாதுர்ய மாக ஆயுத பலத்தின் மூலம் நாட்டின் அதிகா ரத்தைக் கைப்பற்றினார்.

அமெரிக்கா மீதான 9-11 தாக்குதலுக்குப் பிறகு, “பயங்கரவாதத் திற்கு எதிரான போருக்கு” அமெரிக்க அதிபர் ஜார்ஜ் டபிள்யூ. புஷ் ஆதரவு அளித்ததார். அது, அல்-கொய்தா, தாலிபன் ஆதரவாளர்களாக இருந்த அனைவருடனுமான மோதலைக் குறித்தது. அவர்களுடன் பாகிஸ் தான் ராணுவம் கூட்டணியில் இருப்பதாக நீண்ட கால மாகக் குற்றம் சாட்டப்பட்டது.

அமெரிக்காவின் அழுத்தத்தைச் சமாளிக்க பாகிஸ்தானில் பயங்கரவாதிகள் மீதான தாக்குதல்கள், அமெரிக்காவுக்கு எதிரான இஸ்லாமிய குரல்கள் என்று இரண்டையும் சமநிலையில் பேண முயன்ற அவரின் நிலை கயிற்றில் நடப்பதைப் போல மாறியது. கூடவே ஆப்கானிஸ்தான் பிரச் னையும் இருந்தது.

அப்போது கூட்டாட்சி நிர்வாகத்தின் கீழ் இருந்த பழங்குடிப் பகுதிகள் மூலம் ஆப்கனுக்குள் அல்-கொய்தா, தாலிபன் அனுதாபிகள் செல்வதைத் தடுக்க போது மான அளவுக்குச் செயல்படவில்லை என்று நேட்டோ மற்றும் ஆப்கன் அரசாங்கத் தால்பர் வேஸ் முஷாரப் பலமுறை குற்றம் சாட்டப்பட்டார்.

2011ஆம் ஆண்டு பாகிஸ்தானில் ஒசாமா பின்லேடன் கண்டுபிடிக்கப்பட்டபோது, முஷரபின் செயல்பாடுகள் பற்றிய பல கேள்விகள் மீண்டும் எழுந்தன. பின்லேடன் பல ஆண்டுகளாக பாகிஸ்தான் ராணுவ அகாடமிக்கு அருகில் வாழ்ந்து கொண்டிருந்தார். மேலும் பல ஆண்டுகளுக்கு அவரைப் பற்றித் தனக்குத் தெரிவிக்கப்பட்டதாக வெளியான தகவலை முஷாரப் மறுத்துக் கொண்டிருந் தார்.

### நாடு தழுவிய எதிர்ப்பு

ராணுவத் தளபதியாகச் செயல் பட்டபோது அவர் அதிபராக இருந்தது குறித்த தகராறு உட்பட, ஜெனரல் முஷாரபின் பதவிக் காலம் நீதித்துறையுடனான இழுபறியால் குறிக்கப்பட் டது.

2007ஆம் ஆண்டில், அவர் அப்போதைய தலைமை நீதிபதி இப்திகார் முகமது சவுத்ரியை பதிவிநீக்கம் செய்தார். இது நாடு தழுவிய எதிர்ப்புகளைத் தூண்டியது.

சில மாதங்களுக்குப் பிறகு, இஸ்லாமாபாத்தில் உள்ள லால் மஸ்ஜித் மற்றும் அதை ஒட்டியை மதரஸாவை முற்றுகையிட உத்தரவிடப்பட்டது. அதில் 100க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் கடுமையான ஷரியா சட் டத்தை அமுல்படுத் தலால் மஸ்ஜித் மத குருமார்களும் மாணவர் களும் ஆக்ரோஷமான பிரசாரத்தை மேற்கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

இந்தச் சம்பவத்திற்குப் பதிலடியாக, பாகிஸ்தானின் தாலிபன் அமைப்பு உருவாக்கப்பட்டது. ஆயுதம் ஏந்தியவர்களின் தாக்குதல்கள், குண்டுவெடிப்புகள் நடந்தன. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள்.

முஷாரப் சகாப்தத்தின் முடிவுக்கான தொடக்கமாக, நாடு கடத்தப்பட்டிருந்த நவாஸ் ஷெரீப் 2007இல் திரும்பியது அமைந்தது.

முன்னாள் ராணுவ ஜெனரல் தனது ஆட்சியை நீட்டிக்க அவசர நிலையை பிரகடனம் செய்தார். ஆனால், அவரது கட்சி பிப்ரவரி 2008 நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தது. ஆறு மாதங்களுக்குப் பிறகு, அவர் பதவி நீக்கம் செய்யப்படுவதைத் தவிர்க்க ராஜினாமா செய்து நாட்டைவிட்டு வெளியேறினார்.

முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப், லண்டன் மற்றும் துபாயில் தங்கியிருந்தபோது, உலகம் முழுவதும் அவர் வழங்கிய விரிவுரைகளுக்கு ஈடாக கோடிக்கணக்கான டாலர்களை சம்பாதித்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளையில், மீண்டும் ஆட்சிக்கு வருவதே தனது எண்ணம் என்பதை அவர் ஒருபோதும் மறைக்கவில்லை.

மார்ச் 2012இல், அவர் தேர்தலில் போட்டியிடுவதற்காக வியக்கத்தக்க முறையில் பாகிஸ்தானுக்கு திரும்பினார். ஆனால், அவர் நாடு திரும்பியதும் கைது செய்யப்பட்டார்.



அவர் தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்கப்பட்டது. அவரது கட்சியான “ஆல் பாகிஸ்தான் முஸ்லீம் லீக்” எதிர்பார்த்ததைப் போலவே தேர்தலில்படு தோல்வி அடைந்தது.

2007இல் பெனாசிர் பூட்டோ தாலிபன்களால் படுகொலை செய்யப்பட்டார். அது பாகிஸ்தானை மட்டுமின்றி மொத்த உலகையுமே உலுக்கியது. அவருக்குப் போதிய பாதுகாப்பு வழங்காதது தொடர்பான நீதிமன்ற வழக்குகளில் அவர் விரைவில் சிக்கினார். 2010ஆம் ஆண்டு ஐ.நா விசாரணையில், ஜெனரல் முஷராப், முன்னாள் பிரதமரை பாதுகாப்பதில் “வேண்டுமென்றே தோல்வியடைந்ததாக” குற்றம் சாட்டப்பட்டார்.

அதே ஆண்டில், 2007இல் அரசமைப்பை இடைநிறுத்த அவர் எடுத்த முடிவுக்காக அவர் மீது தேசத்துரோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

ஆனால், நீண்ட காலமாக ராணுவம் ஆட்சி செய்த நாட்டில், வழக்கு விசாரணை அவ்வளவு சுலபமானதாக இருக்கவில்லை. எனவே, முன்னாள் ஆட்சியாளரின் வழக்கை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் ஒன்றை அரசு அமைத்தது.

இந்த வழக்கு ஐந்து ஆண்டுகளுக்கு நீடித்தது. இறுதியாக மூன்று நீதிபதிகளைக் கொண்ட சிறப்பு நீதிமன்றம், முஷாரப் தேசத்துரோக குற்றவாளி எனத் தீர்ப்பளித்தது. அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

ஆனால், இந்தத் தண்டனையை நிறைவேற்ற முடியாமல் போனது. பர்வேஸ் முஷாரப் உடல்நலக் குறைவால் தற்போது உயிரிழந்துள்ளார்.

●



# சுடலைக்கழிவு அரசியல்?

- நிலாந்தன்



1970களில் தமிழ் இளைஞர் பேரவையில் உறுப்பின ராக இருந்தவரும் தமிழரசு கட்சியோடு நெருங்கிச் செயற்பட்டவரும், பிந்நாளில் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவரும், இந்திய இலங்கை உடன்படிக்கையின் பின், இணைந்த வடக்கு கிழக்கில் முக்கிய பொறுப்பில் இருந்தவருமாகிய, ஒரு மூத்த அரசி யல் செயற்பாட்டாளரின் நேரடி அனுபவம் இது...தமிழரசுக் கட்சியோடு நெருங்கிச் செயற்பட்ட காலப்பகுதியில் இளையவர்கள் அமிர்தலிங்கத்தின் வீட்டு முன் விறாந்தையில் தங்குவதுண்டாம். ஒருநாள் இரவு அவர்கள் சுவரொட்டி ஒட்டுவதற்காக போகும் பொழுது அவர்களோடு சேர்ந்து அமிர்தலிங்கத்தின் மகன் ஒருவ ரும் சென்றிருக்கிறார். இரவு முழுதும் மகனைத் தேடிக் காணாத அமிர்தலிங்கம் அடுத்த நாள் காலை இந்த இளைஞர்களோடு அவரைக் கண்ட பொழுது பின்வரும் தொனிப்படப் பேசியிருக்கிறார் “நீயும் படிக்காமல் இவங்களப்போல காவாலியாத் திரியப் போறியா?”

1970களில் அமிர்தலிங்கம் எந்த நோக்கு நிலையில் இருந்து அவ்வாறு கூறினாரோ, அதே நோக்கு நிலையில் இருந்துதான் கிட்டத்தட்ட 50 ஆண்டுகளின் பின் சுமந்திரனும் கதைக்கிறாரா ? “20 வருடங்களாகக் கூட இருந்தவர்களை நல் வழிப்படுத்த எடுத்த முயற்சியிலும் நாம் தோல்வி அடைந்து விட்டோம்” இவ்வாறு சுமந்திரன் அண்மையில் சாவகச்சேரியில் வைத்துக் கூறியுள்ளார். முன்பு பங்காளிகளாக இருந்த கட்சிகளை நோக்கித்தான் அவர் அவ்வாறு கூறியுள்ளார். அவர்களை நல் வழிப்படுத்த முற்பட்டோம் என்று கூறுகிறார். ஆயின் அவர்கள் திருத்தப்பட வேண்டிய குற்றவாளிகள் என்று பொருள். ஆயுதப் போராட்டத்தில் ஈடு பட்டவர்களை குற்ற வாளிகள் அல்லது திருத்தப்பட வேண்டிய வர்கள் என்று அவர் கருதுகிறாரா? இரண்டு தசாப் தங்களாக ஒன்றாகக் குடும்பம் நடத்தி விட்டு இப்பொழுது இனித் திருந்த மாட் டார்கள் என்று கூறுகிறாரா?

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நல்வழிப்படுத்துவது என்பது ஏறக் குறைய அரசாங்கம் கூறு வதுபோல புனர் வாழ்வழிப்பது என்ற பொருளில்தான். ஒரு ஆயுதப் போராட் டத்தில் ஈடுபட்டவர்களை அவ்வாறு கூறத்தக்க மனோநிலை எங்கிருந்து வருகிறது? நாங்கள் தூய மிதவாத கட்சி. ஆயுதப் போராட்டத்தில் ஈடுப டாதவர்கள். எமது கைகளில் ரத்தம் இல்லை. கொலைப்பழி இல்லை. நாங்கள் படித்தவர் கள் நாங்கள் எப்பொழு தும் நல்வழியில்தான் செல்கிறோம்.. என்று நம்பும் ஒரு மிதவாத பாரம்பரி யத்தில் இருந்தா அவ்வாறு கூறப்படுகிறது?

ஆனால் தமிழரசுக் கட்சி அப்படி கூறமுடியாது. ஏனெனில் இக்கட்டுரை யின் தொடக்கத்தில் கூறப்பட்ட அரசியல் செயற்பாட் டாளரும் உட்பட ஆயிரக்கணக்கான இளவயதினரை ஆயுதப் போராட்டத்தை நோக்கித் தூண்டியதே தமிழ் மிதவாதிகள்தான். குறிப்பாக தமிழரசு கட்சியானது தேர் தல்களில் தோற்கும்பொழுது தீவிர தேசிய நிலைப்பாட் டை கையில்எடுக்கும். (இப்பொழுது, பேச்சுவார்த்தை மேசையில் தீவிரமான நிலைப்பாட்டை எடுப்பது போல). அப்பொழுது அவர்கள் பேசும் வீர வசனங்க ளில் மயங்கி இளையோர் அவர்கள் பின் செல்வார்கள். அந்த இளையோரை தமது அரசியல் எதிரிகளுக்கு எதி ராகத் திருப்பி அவர்களைத் தண்டிக்குமாறு தூண்டியது தமிழ் மிதவாதிகள்தான். மேடைகளில் அவர்கள் செய்த முழக்கங்களை கலாநிதி சிதம்பரநாதன் “வார்த்தை வன் முறை-வேர்பல் வயலன்ஸ்” என்று வர்ணிப்பார். இவ் வாறு தமிழ் மிதவாதிகளால் தூண்டப்பட்டு போசிக்கப் பட்டு வளர்த்தெடுக்கப்பட்டதே தமிழ் ஆயுதப் போராட்டம் ஆகும். எனவே தமிழரசுக் கட்சி இதில் தனக்கு சம்பந்தமில்லை என்று கூறமுடியாது. தனது கையில் ரத்தம் இல்லை என்றும் கூற முடியாது.

தமிழரசு கட்சியின் தேர்தல் மேடைகளில் இளையோர் உணர்ச்சிவசப்பட்டு விரலை வெட்டி தலைவர்களின் நெற்றியில் ரத்தத் திலகம் வைத்தார்கள். அவ்வாறு ரத்தத்தால் பொட்டு வைத்த ஒருவர் பின்னாளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புலனாய்வுத்துறை பொறுப்பாளராக வந்தார். அவருக்கு இயக்க பெயரும் பொட்டு என்று வைக்கப்பட்டது. இப் படியாக இளைஞர்களை ரத்தம் சிந்து மாறு ஊக்குவித்த ஒரு கட்சி இப்பொழுது தன்னை ஒரு தூய மிதவாதக் கட்சியாக கூறிக்கொள்ள முடியாது.

ஏன் அதிகம் போவான்? தமிழரசுக் கட்சியின் தலைவர் அமிர்தலிங்கத்தின் மகன் இந்தியாவில் ஒரு இயக்கத்தைத் தொடங்கிய பொழுது அதை அமிர்தலிங்கம் தடுக் கவில்லை.

இவ்வாறு தமது இயலாமை, பொய்மை, போர்க்குண மின்மை என்பவற்றிற்கு எதிராகத் திரண்டு வந்த இளை யோரின் கோபத்தைத் திசைதிருப்பி ஆயுதப் போராட் டத்தை நோக்கி ஊக்கிவித்ததன்மூலம் தமிழ்த் தலைமை கள் தந்திரமாக போராட்ட பொறுப்பை இளைய தலை முறையின் தலையில் சுமத்தின. ஆயுதப் போராட்டம் படிப்படியாக அரங்கில் முன்னேறத் தொடங்கிய பொழுது அதன் தர்க்கபூர்வ விளைவாக தமிழ் மிதவாதி கள் பின்னரங்கிற்கு தள்ளப்பட்டார்கள். ஒரு கட்டத்தில் ஆயுதப் போராட்டம் மிதவாதிகளுக்கு எதிராகவும் திரும்பியது. அதாவது ஆயுதப் போராட்டத்தால் தண் டிக்கப்படுவோரின் பட்டியலில் தமிழ் மிதவாதிகளும் இருந்தார்கள் என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

எனினும் அதே ஆயுதப் போராட்டம் அதன் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு பின் ஒரு பண்புருமாற்றத்துக்கு தயாராகியது. அதன் விளைவுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. கூட்டமைப்பு எனப்படுவதே 2009க்கு முந்திய ஒரு பண்புருமாற்றத்தின் -trasformation-விளைவுதான். நவீன தமிழ் அரசியலில் தோன்றிய சாம்பல் பண்பு அதிகமுடைய (பசநல) ஒரு கட்டமைப்பு அது. அப்பண்புருமாற்றத்தை 2009 க்குப் பின் அடுத்த கட்டக் கூர்ப்புக்கு எடுத்துச் செல்ல சம்பந்தர் தவறிவிட்டார். வரலாறு அவருக்கு நிர்ணயகரமான,உன்னதமான ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியது. ஆனால் வரலாறு அவருக்கு வழங்கிய பொறுப்பை அவர் பொருத்தமான விதத்தில் நிறைவேற்றவில்லை. ஒரு பண்புருமாற்ற காலகட்டத்தை அவர் வீணடித்து விட்டார். ஒரு பண்புருமாற்றத்துக்குத்



தலைமைதாங்க அவரால் முடியவில்லை. அதற்கு அவசியமான அரசியல் உள்ளடக்கமும் அவரிடமில்லை.

தமிழ் மக்கள் ஓர் ஆயுதப் போராட்டத்தை கடந்து வந்த மக்கள். ஆயுதப் போராட்டம் என்றாலே எல்லாருடைய கைகளிலும் ரத்தம் இருக்கும். இதில் எல்லாருக்கும் ஏதோ ஒரு விகிதமளவுக்குக் கூட்டுப் பொறுப்பு உண்டு. தமிழ் மக்கள் தங்களுடைய இறந்த காலத்தைக் கிண்டத் தொடங்கினால் பிணமும் நிணமும் எலும்புக் கூடுகளுந்தான் வெளியேவரும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை இறந்த காலத்தை கிண்டுவது என்பது அதன் பெரும்பாலான அர்த்தத்தில் புதைமேடுகளைக் கிண்டுவதுதான். அப்படிக் கிண்டத் தொடங்கினால், ஒருவர் மற்றவரைக் குற்றவாளியாக்குவதிலேயே தேசம் பல துண்டுகளாக சிதறிப் போய்விடும்.

ஓர் ஆயுத மோதலுக்கு பின்னரான அரசியல் என்ற அடிப்படையில்,தமிழ் மக்கள் இரண்டு தளங்களில் தமது அரசியலை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. ஒன்று நீதிக்கான போராட்டம். இரண்டு, அந்தப் போராட்டத்துக்காக தேசத் திரட்சியை ஆகக்கூடியபட்சம் உடையவிடாமல் பாதுகாப்பது. அவ்வாறு தேசத்திரட்சியை பலமான நிலையில் பேணுவதென்றால், அதற்கு தமிழ் அரசியலில் பண்புருமாற்றம் அவசியம். அதாவது வெளி நோக்கிய நீதிக்கான போராட்டம் உள்நோக்கிய பண்புருமாற்றம். அதற்கு பரந்த மனம் கொண்ட பெருந்தலைவர்கள் வர வேண்டும்.

ஆனால் சம்பந்தர் அவ்வாறான ஒரு பெருந் தலைவரல்ல. தமிழ் அரசியலில் முன்னெப்பொழுதும் தோன்றியிராத ஒரு சாம்பல் பண்புமிக்க கூட்டுக்கு சுமார் 20 வருடங்கள் அவர் தலைமை தாங்கினார். தமிழ் மிதவாத அரசியலிலேயே அதிகளவு ஆசனங்களை(22) வென்ற அக் கூட்டு படிப்படியாகச் சிதைந்து போய் விட்டது. அதற்கு அவரும் பொறுப்பு. அவர் தலைமை தாங்கிய ஒரு கூட்டுக் கலைந்தபொழுது, அதன் தலைவராக, அதைக்குறித்து அவர் உத்தியோகபூர்வமாக எதையும் சொல்லவில்லை. அல்லது சொல்ல முடிய வில்லை. கூட்டமைப்பின் சிதைவு என்பது சம்பந்தருடைய தலைமைத்துவத்தின் தோல்வியுந்தான். தமிழ் பண்புரு மாற்ற அரசியலின் தோல்வியுந்தான். அது தமிழரசுக் கட்சியின் தோல்வியுமா என்பதை இனிவருங் காலமே தீர்மானிக்கும்.

கடந்த சில கிழமைகளுக்குள் கூட்ட மைப்பு மட்டும் சிதையவில்லை தமிழரசு கட்சியும் இறுக் கமான ஒரு கட்சியாக உள்ளதா என்ற கேட்குமளவுக்கு நிலைமைகள் காணப்படுகின்றன. கடந்த கிழமை உள்ளூராட்சி மன்றத் தேர்த லுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும்போது மார்ட்டின் வீதியில், கட்சித் தலைமையகத்தில் மூத்த தலைவர்கள் காத்துக் கொண்டிருந்திருக்கி றார்கள். ஆனால் வேட்பு மனுக்கள் சுமந்திரனின் அணியைச் சேர்ந்த ஒருவ ருடைய அலுவலகத்தில் தயாரிக் கப்பட்டு நேரடியாக கச்சேரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக குற்றஞ்சாட்டப்படு கிறது. அதாவது கட்சித் தலைமையின் கட்டுப்பாட்டுக்குள் கட்சி இல்லை என்று பொருள். அது மட்டு மல்ல, கிளி நொச்சியில் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பொழுது, சுமந்திரனுக்கு விசு வாசமான அணியைச் சேர்ந்தவர்கள் புறக்கணிக்கப்பட்டிருக் கிறார்கள். அதனால் அவர்கள் சுயேச்சைக் குழுவாக போட்டியிடுகிறார்கள். அவர்களில் சிலர் சந்திரகுமாரின் சமத்துவக் கட்சியில் இணைந்து விட்டார்கள். சிறீதரனின் அன்ரன் பாலசிங்கம் கட்சியை எங்கே கொண்டு போகிறார்?

கடந்த திங்கட்கிழமை கரைச்சி பிரதேச சபையின் தவிசாளரின் வீட்டுக்கு முன் சுடலைக் கழிவுகள் ஒரு மூட்டையாகக் கட்டிப் போடப்பட்டுள்ளன என்பதனை அவர் முகநூலில் பதிவேற்றியுள்ளார். அதை யார் செய்தது என்பது நிரூபிக்கப்படவில்லை. எனினும் முகநூலில் பிரதேச சபை தவிசாளர் எழுதிய குறிப்பில், சுயேட்சைக் குழுவின் மீதே குற்றஞ் சாட்டப்படுகிறது. ஒரே கட்சிக்குள் ஒரே தேர்தல் தொகுதிக்குள் ஏற்பட்ட மோதல்கள் சுடலைக் கழிவுகளை வீட்டின் முன் போடும் அருவருப்பான ஒரு வளர்ச்சிக்கு வந்து விட்டனவா? இருபது வருடங்களாக ஒன்றாகக் குடும்பம் நடத்திவிட்டு இப்பொழுது முன்னாள் பங்காளிகளை ஒட்டுக் குழுக்கள். தூள் கடத்திகள், தலையாட்டிகள் என்று அழைக்கலாமென்றால், நாளை, கட்சியை உடைத்துக் கொண்டு வெளியேறுபவர்களுக்கு என்னென்ன பட்டங்களைச் சூட்டப் போகிறார்கள்? ●

# துருக்கி - சிரியாவை உலுக்கிய நிலநடுக்கத்தின் அழிவுகள்...











கல்வி tv CHANNEL-1

**07.02.2023**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**07.02.2023**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# போதைப்பொருள் வியாபாரிகளுக்கு எதிராக அம்பாறையில் ஆர்ப்பாட்டம்

அம்பாறை, பெப். 07

அம்பாறை, ஆலையடிவேம்பு பிரதேசத்தில் இடம் பெற்றுவரும் போதைப்பொருள் வியாபாரம், சூதாட்டம், மிரட்டல்கள் போன்ற சட்டவிரோத செயற்பாடுகளை நிறுத்தக் கோரி, பிரதேச செயலகத்தின் முன்னால் கடந்த வெள்ளியன்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.



பிரதேச சமூக அமைப்புகள், மத நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தன.

இதன்போது, அண்மைக் காலமாக போதைப்பொருள் வியாபாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பல கொள்ளைச் சம்பவங்கள், நீதிமன்ற ஆவணங்களை அழிக்கும் போக் கில் பதிவேட்டறைக்கு தீ வைத்தமை, பிரதேச செயலாளருக்கும் ஆசிரியர்களுக்கும் விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல்கள் போன்ற தொடர் சம்பவங்களால் பிரதேசத்தின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதாகவும் இவற்றைத் தடுக்க பொலிஸார் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் ஆற்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களால் குற்றஞ்சாட்டப்பட்டது.

சூதாட்ட மையங்கள் இயங்கி வருவது தொடர்பான தகவல்களை பொலிஸாருக்கு மக்கள் வழங்குகின்ற போதும், பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்காமல் இருப்பது, மேற் சொன்ன சட்டவிரோத செயற்பாடுகளை இப்பிரதேசத்தில் ஊக்குவிப்பது போன்ற தோற்றப்பாட்டை உருவாக்கியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதன்போது ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கான மகஜர், ஆலையடி வேம்பு பிரதேச செயலாளர் வி. பபாகரனிடம் கையளிக்கப்பட்டது. (அ)



# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

திருமலை, பெப். 07

75ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு காப்போம் தொண்டு நிறுவனத்தினால் திருகோணமலை - புதுக்குடியிருப்பு கிராமத்தில் கல்வி கற்கும் வறிய குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் பாதணிகள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

காப்போம் தொண்டு நிறுவனத்தின் செயலாளர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை காப்போம் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதிப்கரன் கலந்துகொண்டு கற்றல் உபகரணங்கள் மற்றும் பாதணிகளை போன்றவற்றை வழங்கினார்.

இந்நிகழ்வில் காப்போம் அமைப்பின் நிருவாகக் குழுவினர் மற்றும் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (அ)

# பாரம்பரிய நெல்லினங்கள் அறுவடை மட்டக்களப்பில்



மட்டக்களப்பு, பெப். 07

மட்டக்களப்பு மாவட்டம் விவசாயத் திணைக்கள விரிவாக்கல் பிரிவின் பழுகாமம் விவசாய விரிவாக்கல் நிலையத்தின் கீழுள்ள களுமுந்தன்வெளிக் கிராமத்தில் செய்கை பண்ணப்பட்ட பாரம்பரிய நெல் மற்றும் உப உணவு பயிர்ச்செய்கை அறுவடை விழா, விவசாயப் போதனாசிரியர் பரமேஸ்வரன் சகாப்தனின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அர சாங்க அதிபர் (காணி) திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன், விவசாயத் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் ப. பேரின்பராசா, தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் எஸ். சித்திரவேல், போரதீவுப் பற்று உதவி பிரதேச செயலாளர் வி. துலாஞ்சன், பாடவிதான உத்தியோகஸ்தர்க ளான திருமதி லாவன்யா செந்தீபன், என். லஸ்மன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். அப்பகுதியில் 120 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டிருந்த பாரம்பரிய நெல்லினங்களான பச்சைப் பெருமாள், மடத்தவழு ஆகியவை இதன்போது அறுவடை செய்யப்பட்டன. (அ)

# காத்தான்குடியில் நூல் வெளியீடு



அம்பாறை, பெப். 07

எம்.ஏ.சி.எம் ஜவஹீர் ஆசிரியர் எழுதிய 'ஈழப் பிரிவினைப் போர் - காத்தான்குடி சமூகத்தின் மீது ஏற்படுத்திய பாதிப்புகளும் கோரிக்கைகளும்' எனும் நூல் கடந்த வெள்ளிக்கிழமை காத்தான்குடி அல்மனார் மண்டபத்தில் வெளியீட்டு வைக்கப்பட்டது.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம், றைஸ் சிறிலங்கா ஆகிய நிறுவனங்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நூல் வெளியீட்டு வைபவத்துக்கு றைஸ் சிறிலங்கா நிறுவனத்தின் செயலாளரும் பணிப்பாளருமான சட்டத்தரணி ஏ. உவைஸ் தலைமை வகித்தார்.

வைபவத்தில் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களில் சம்மேளனத்தின் தலைவர் ரவூப் ஏ மஜீத், றைஸ் சிறிலங்கா நிறுவனத்தின் தவிசாளர் முஹம்மத் நவாஸ் உட்பட உலமாக்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நூல் ஆய்வுரையை சிராஜ் மசூர் நிகழ்த்தினார். (அ)

# சாதனையாளர் கௌரவிப்பு

அம்பாறை, பெப். 07

சம்மாந்துறை வலயத்திற்குட்பட்ட மத்திய முகாம் முஸ்லிம் அரசினர் பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சை யில் சித்தி பெற்ற செல்வி ஏ.எம்.பாத்திமா றிஹா கடந்த வெள்ளிக் கிழமை பாராட்டிக் கௌரவிக்கப் பட்டார்.

பாடசாலை அதிபர் வை.பி.ஏ. சுல்தான் தலைமையில் நடைபெற்ற விழாவில் பிரதம அதிதியாக சம்மாந் துறை வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா கலந்து சிறப்பித்தார்.

தரம் 5 கற்பித்த ஆசிரியர் எஸ்.பரம் சோதி பரிசுகள் வழங்கி கௌரவிக்ப்ரீகப்பட் டார். ஏனைய மாணவர்களும் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். (அ)





# கன்னியாவில் ஆண் சிசு மீட்பு

திருமலை, பெப். 07

திருகோணமலை, கன்னியா, சர்தாபுர வீதியோரத்தில், பசளை உறையில், வெள்ளைத் துணியால் சுற்றப்பட்டிருந்த நிலையில் ஆண் சிசு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டெடுக்கப்பட்ட சிசுவை, திருகோணமலை பொது வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதாகவும் சிசு பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளும் வகையில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர். (அ)




# அதிகாலை பெரும் நிலநடுக்கம்
# துருக்கி, சிரியாவில் 600 பேர் பலி!



## 3 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் காயம்

இஸ்தான்புல், பெப். 07

தென் கிழக்கு துருக்கி மற்றும் சிரியா எல்லை அருகே நேற்று அதிகாலை ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் குறைந்த 600 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

துருக்கியில், அதிகாரிகள் இதுவரை 284 இற்கும் மேற்பட்ட இறப்புகளை உறுதிப்படுத்தினர்.

சிரியாவில் 237 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அலெப்போ, லதாகியா, ஹமா மற்றும் டார்டஸ் மாகாணங்களில் மக்கள் உயிரிழந்துள்ளதாக சிரிய சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த சில மணிநேரங்களில் பலி எண்ணிக்கை கடுமையாக உயரும் என அஞ்சப்படுகிறது.

கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ள நிலையில்,இடிபாடுகளுக்கு இடையில் தேடல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இரு நாடுகளிலும் குறைந்தது 500 பேர் கொல்லப்பட்டதுடன், 3ஆயிரம் பேருக்கு மேல் காயமடைந்தனர்.

இந்த நில அதிர்வு சைப்பிரஸ், லெபனான் உள்ளிட்ட சில நாடுகளிலும் உணரப்பட்டுள்ளது.

கெய்ரோ வரை உணரப்பட்ட இந்த நிலநடுக்கம், சிரிய எல்லையில் இருந்து 90 கிலோமீற்றர் (60 மைல்) தொலைவில் உள்ள காசியான்டெப் நகருக்கு வடக்கே ஏற்பட்டிருந்தது.

இதேவேளை, புவி அறிவியலுக்கான ஜெர்மன் ஆராய்ச்சி மையம் நில அதிர்வு, 10 கிமீ (6 மைல்) ஆழத்தில் ஏற்பட்டதாக தெரிவித்துள்ளது.

அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் 7.8 ரிச்டர் அளவில் ஏற்பட்ட ஆரம்ப நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அடுத்தடுத்து தொடர்ந்து நிலநடுக்கங்கள் ஏற்பட்டதாக அறிவித்தது.

காசியான்டெப்பில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.7 பதிவான அதேவேளை, நகரின் நூர்டாக் பகுதியில் 5.6 ஆகவும் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தினால் துருக்கியில் வசிக்கும் இலங்கையர் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என இதுவரை வெளியாகியுள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் அங்காராவில் உள்ள இலங்கை தூதரகம் நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

(அ)



# இந்த மாத இறுதியில் உக்ரைன் தாக்கப்படும்

## அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை

கீவ், பெப். 07

இந்த மாத இறுதியில் ரஷ்யாவின் புதிய தாக்குதலை நாடு எதிர்பார்ப்பதாக உக்ரையினின் பதவி விலகும் பாதுகாப்பு அமைச்சர் ஒலெக்ஸி ரெஸ்னிகோவ் தெரிவித்துள்ளார்.

அனைத்து மேற்கத்திய ஆயுதங்களும் அதற்குள் வந்திருக்காது. ஆனால் உக்ரைனில் ரஷ்யப் படைகளைத் தடுக்கப் போதுமான இருப்புக்கள் உள்ளதாக அவர் மேலும் கூறினார்.

கிழக்கில் உள்ள பக்முட், வுஹ்லேடர் மற்றும் லைமன் ஆகிய இடங்களில் துருப்புக்கள் கடுமையாக சண்டையிட்டு வருவதாக ஜனாதிபதி வோலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார். ரெஸ்னிகோவின் கருத்துக்கள் அவர் பாதுகாப்பு அமைச்சராக பதவி நீக்கம் செய்யப்படு வார் என அறிவிக்கப்படுவதற்கு சில மணிநேரங்களுக்கு முன்பு வந்துள்ளது.

இராணுவ புலனாய்வுத் தலைவர் கைரிலோ புடானோவ் அவரது இடத்துக்கு நியமிக்கப்படுவார் என்று ஸெலென்ஸ்கியின் கட்சியைச் சேர்ந்த உக்ரைனிய அரசியல்வாதி ஒருவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சகத்தை பாதித்துள்ள தொடர்ச்சியான ஊழல் மோசடிகளுக்கு மத்தியில் இந்த மாற்றம் வந்துள்ளது.

இராணுவத்திற்கான உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக சில பாதுகாப்பு அதிகாரிகள் பொது நிதியை மோசடி செய்ததாக சந்தேகிக்கப்படுவதாக வெளியான ஊடக அறிக்கைகளை ரெஸ்னிகோவ் மறுத்துள்ளார்.

# கொல்லமாட்டேன் என்று உத்தரவாதமளித்த புடின்

## அதன் பின் பதுங்குகுழியிலிருந்து வெளியேறி செல்பி படம் வெளியிட்ட ஜெலென்ஸ்கி



ஜெருசலேம், பெப். 07

ரஷ்யா-உக்ரைன் போரின் ஆரம்ப நாட்களில், உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை கொல்ல மாட்டேன் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உறுதியளித்தார் என இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் நப்தலி பென்னட் கூறினார்.

கடந்த சனிக்கிழமையன்று யூரியூப் சனலில் வெளியிடப்பட்ட வீடியோவில் முன்னாள் இஸ்ரேலிய பிரதம மந்திரி பென்னட், இந்த தகவலை வெளியிட்டார்.

உக்ரைன் மீது படையெடுப்பைத் தொடங்கிய ஒரு வாரத்திற்குப் பிறகு, கடந்த ஆண்டு மார்ச் மாதக் கூட்டத்தில் புடின் தனக்கு இரண்டு பெரிய சலுகைகளை வழங்கினார் என்று கூறினார்.

மோதலின் ஆரம்ப நாட்களில் மத்தியஸ்தம் செய்வதற்காக மார்ச் 5, 2022 அன்று மொஸ்கோவில் பென்னட், புடினை சந்தித்தார். யுத்தம் இப்போது 12ஆவது மாதத்தை எட்டியுள்ளது.

ஜெலென்ஸ்கி ஒரு பதுங்கு குழியில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதை நான் அறிவேன். 'நீங்கள் ஜெலென்ஸ்கியைக் கொல்ல விரும்புகிறீர்களா?' என புடினிடம் கேட்டேன்.

அவர் கூறினார், 'நான் ஜெலென்ஸ்கியைக் கொல்ல மாட்டேன்," என்று பென்னட் பேட்டியில் நினைவு கூர்ந்தார்.

"நீங்கள் ஜெலென்ஸ்கியைக் கொல்ல மாட்டீர்கள் என்று உங்கள் உத்தரவாதத்தை எனக்குக் கொடுக்கிறீர்களா?" என நான் கேட்டேன்.

அதற்கு ரஷ்ய ஜனாதிபதி "நான் ஜெலென்ஸ்கியைக் கொல்லமாட்டேன்."-என்றார்.

புடினுடனான மூன்று மணிநேர சந்திப்புக்குப் பிறகு, பென்னட் ஜெலென்ஸ்கியை அழைத்து, "நான் ஒரு சந்திப்பிலிருந்து வெளியே வந்தேன். புடின் உங்களைக் கொல்லப் போவதில்லை என்று கூறினேன். நீங்கள் உறுதியாக இருக்கிறீர்களா?' என அவர் என்னிடம் கேட்டார். நான் 100 சதவீதம் சொன்னேன். புடின் உங்களைக் கொல்லப் போவதில்லை என்று.

அவர்களின் உரையாடலுக்கு இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு, ஜெலென்ஸ்கி தனது அலுவலகத்தில் ஒரு செல்பி எடுத்து "எனக்கு பயமில்லை" என்ற தலைப்புடன் அதை வெளியிட்டார் என பென்னட் தெரிவித்தார். (அ)

# மகளிர் உலகக் கிண்ணம் 10ஆம் திகதி தொடக்கம்




கேப்டவுன், பெப். 07

உலகம் முழுவதும் ஆவலுடன் எதிர்பார்க்கும், ஐ. சி. சி. மகளிர் இருபது - 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் தென்னாபிரிக்காவில் எதிர்வரும் 10ஆம் திகதி தொடங்கி 26-ஆம் திகதி வரை நடைபெறுகிறது. மொத்தம் 10 அணிகள் இதில் பங்கேற்கின்றன.

இங்கிலாந்தில் 2009இல் முதல் உலகக் கிண்ணப் போட்டி நடைபெற்றது. 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் இப்போட்டியில் தொடக்கத்தில் 8 அணிகள் இடம் பெற்றிருந்தன. 2014 முதல் 10 அணிகளாக உயர்த்தப்பட்டன.

அவுஸ்திரேலியாவில் 2020இல் நடைபெற்ற உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியாவை 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது

5 முறை சம்பியன் பட்டம் அவுஸ்திரேலியா வசம் சென்றது.

தற்போது உலகக் கிண்ணத் தொடர் 2023இல் தென்னாபிரிக்காவில் நடைபெறுகிறது. 2024இல் பங்களாதேஷிலும், 2026இல் இங்கிலாந்திலும் போட்டி நடத்தப்படுகிறது. அப்போது அணிகளின் எண்ணிக்கையும் 12ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நிகழாண்டு உலகக் கிண்ணத்தில் மொத்தம் 10 அணிகள் கலந்து கொள்கின்றன. முதல் சுற்று மற்றும் விலகல் முறை அடிப்படையில் ஆட்டங்கள் நடக்கின்றன. குழு 1இல் இலங்கை, அஸ்திரேலியா, பங்களாதேஷ், நியூசிலாந்து, தென்னாபிரிக்கா அணிகள் உள்ளன.

குழு 2இல் இங்கிலாந்து, இந்தியா, அயர்லாந்து, பாகிஸ்தான், மே.இந்திய தீவுகள் இடம்பெற்றுள்ளன.

**அவுஸ்திரேலியா :** நடப்பு சம்பியன் ஆஸி. 6ஆவது முறையாக பட்டம் வெல்லும் முனைப்பில் உள்ளது. பிரபல வீராங்கனைகளான கப்டன் மெக்லேனிங், துணை கப்டன் அலிஸா ஹீலி, சகல துறை வீராங்கனை எல்ஸி பெர்ரி, பேஸர் மேகன் ஷூட் ஆகியோர் பலம் சேர்க்கின்றனர்.

தென்னாபிரிக்க மண்ணில் ஆஸி. அணி இதுவரை ஒரு இருபது - 20 தொடரில்கூட ஆடவில்லை. இது அந்த அணிக்கு பலவீனமாக உள்ளது. கிம் கார்த், ஹீதர் கிரஹாம் ஆகியோர் புதிய அறிமுகம் ஆவர்.

**இங்கிலாந்து:** ஒரே ஒருமுறை சம்பியனான இங்கிலாந்து தரவரிசையில் 2ஆம் இடத்தில் உள்ளது. ஹீதர் நைட் தலைமையிலான இங்கிலாந்து அணி மீண்டும் சம்பியன் ஆகும் முனைப்பில் உள்ளது. லாரன் பெல், கேத்ரீன் ஷிவர், பிரண்ட், 18 வயதே ஆன சகலதுறை வீராங்கனை அலிஸ் கேப்ஸி ஆகியோர் கவனிக்கத் தக்கவர்கள் ஆவர்.

**பங்களாதேஷ்:** 2022இல் தகுதிப் போட்டியின் மூலம் உலகக் கிண்ணத்துக்கு தகுதி பெற்றது பங்களாதேஷ். வல்லரசு அணிகளை எதிர்கொண்டு ஆட உள்ளது. ஷோர்னா அக்தர் அதிரடி துடுப்பாட்ட வீராங்கனையாக உள்ளார்,. திலாரா அக்தர், திஷா பிஸ்வாஸ், நிகார் சுல்தானா ஆகியோர் குறிப் பிடத்தக்கவர்கள்.

**இந்தியா:** இளம் வீராங்கனைகளைக் கொண்ட இந்திய அணி 2020 இல் இரண்டாவது இடத்துக்கு வந்தது. மேலும், 3 முறை அரையிறுதிக்கு தகுதி பெற்றனர். 2022 இல் அவுஸ்திரேலியாவை வீழ்த்திய ஒரே அணி இந்தியா தான். தீப்தி சர்மா, ரேணுகா சிங், ராதா யாதவ் உள்ளிட்ட பந்துவீச்சாளர்கள் நம்பிக்கை அளிக்கின் றனர். துடுப்பாட்ட வீராங்கனைகள் ஹர்மன்ப்ரீத், ஸ்மிருதி மந்தனா, ஃஷ பாலி வர்மா ஆகியோர் வலு சேர்க்கின்றனர். முதன்முறையாக சம்பியன் ஆகும் தீவிரத்தில் உள்ளது.

**அயர்லாந்து:** 2018 பின்னர் மீண்டும் உலகக் கிண்ணத்துக்கு வந்துள்ளது அயர்லாந்து. 24 வயதை சராசரியாகக் கொண்ட இளம் அணியாக திகழ்கிறது. பாகிஸ்தானுக்கு எதிராக நவம்பரில் தொடரை கைப்பற்றியது. லாரா டெலானி தலைமையிலான அணியில் கேபி லெவிஸ் நட்சத்திர வீராங்கனையாக திகழ்கிறார்.

**நியூசிலாந்து:** கடந்த உலகக் கிண்ணத்தில் 6-ஆவது இடத்தையே நியூசிலாந்து பெற்றது. இந்த முறை சிறப்பான தொடக்கத்தை பெற விழைந்துள்ளது. உடல்நலக்குறைவாக் 2 ஆண்டுகள் விலகி இருந்த விக்கெட் காப்பாளர் பெர்னாடைன் மீண்டும் வந்துள்ளார். இந்த அணி இரண்டு முறை இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

**பாகிஸ்தான்:** பிஸ்மா மரூப் தலைமையிலான பாக். அணி அண்மைக் காலமாக சரிவை சந்தித்து வருகிறது. குழு 2-இல் இந்தியா, இங்கிலாந்து அணிகளை சமாளிக்க வேண்டும். நிதா தர், பிஸ்மா வலு சேர்க்கின்றனர்.

**தென்னாபிரிக்கா:** அணித் தலைவி டேன் வேன் நைகெர்க்கை தென்னாபிரிக்க சபை நீக்கி விட்டது. மாரிஸேன் காப், சுன் லஸ், லாரா வொல்வர்ட், ஷப்நிம் இஸ்மாயில், ஆகியோர் நட்சத்திர வீராங்கனைகளாக உள்ளனர். போட்டியை நடத்தும் நாடு என்ற வகையில் இறுதிக்கு நுழைய தீவிரமாக போராடும்.

**இலங்கை:** தரவரிசையில் 9ஆம் இடத்தில் உள்ள இலங்கை அணி சமரி அத்தபத்து தலைமையில் தொடர்ந்து முதல் சுற்றோடு வெளியேறி வந்தது. ஐனோகா ரணவீரா, சுகந்திகா குமரி ஸ்பின்னிலும், ஒஷடி ரணசிங்கா, கவிஷா தில்ஹரி அவர்களுக்கு பக்கபலமாக இருப்பர். முதல் போட்டியில் தென்னாபிரிக்காவை எதிர்கொள்கிறது.

**மே.இந்திய தீவுகள்:** 2016-இல் சம்பியன் பட்டம் வென்றது மே.இந்திய தீவுகள். ஸ்டெபானி ரெய்லர், ஷெமைன் கேம்பல், அஃபி ப்ளடச்சர், ஆகியோர் உள்ளனர். (ஐ)

# மேற்கிந்திய ஆரம்ப வீரர்கள் அதிரடியாக சதம் அடித்தனர்!

புலவாயோ, பெப். 06

சிம்பாப்வே அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தொடக்க வீரர்களான பிராத்வெயிட், சந்தர்போல் ஆகியோர் சதம் அடித்து அசத்தியுள்ளனர்.

மேற்கிந்தியத்தீவுகள் - சிம்பாப்வே அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி புலவாயோவில் சனிக்கிழமை தொடங்கியது.


மழையால் பாதிக்கப்பட்ட தொடக்க நாளில் மேற்கிந்தியத் தீவுகள் விக்கெட் இழப்பின்றி 112 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

அணித் தலைவர் கிரேக் பிராத்வெய்ட், தேஜ்நரின் சந்தர் போல் தலா 55 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர். இந்த நிலையில் 2ஆவது நாள் ஆட்டமும் மழையால் பாதிக்கப்பட்டது. தேநீர் இடைவேளைக்கு பிறகு தொடர்ந்து ஆடிய இருவரும் சதம் அடித்தனர். ஒரே இனிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகளின் தொடக்க ஆட்டக்காரர்கள் இருவரும் சதம் அடிப்பது 2012ஆம் ஆண்டுக்கு பிறகு இதுவே முதல் முறையாகும்.

இதில் தேஜ் நரினுக்கு இது முதலாவது சதமாகும். இவர் மேற்கிந்தியத் தீவுகளின் ஜாம்பவான் ஷிவ்நரின் சந்தர் போலின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்த ஆட்டத்தில் பிராத்வெயிட் 182 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கைல மேயர்ஸ் 20 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

நேற்று மதிய நேரம் உணவு இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது மேற்கிந்தியத் தீவுகள் அணி 374 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்திருந்தது. (ஐ)








# இந்தியாவுடனான டெஸ்ட் ஆஸியின் ஹசில்வூட் விலகல்!

நாக்பூர், பெப். 07

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியாவின் ஜோஷ் ஹசில்வூட் பங்கேற்க மாட்டார் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன் னணி வேகப் பந்து வீச்சாளர் ஜோஷ் ஹசில்வூட்டுக்கு கடந்த மாதம் சிட்னியில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் போது இடது கணுக்கால் பகுதியில் காயம் ஏற்பட்டது.

இதிலிருந்து அவர் இன்னும் முழுமையாக மீளவில்லை. அவுஸ்திரேலிய அணிக்கான பயிற்சி முகாமிலும் அவர் பெரியளவில் பந்து வீசவில்லை. இதனை அவரே நேற்று தெரிவித்தார்.

இதன் மூலம் அவர் இந்தியாவுக்கு எதிராக நாளை மறுதினம் நாக்பூரில் தொடங்கும் முதலாவது டெஸ்டில் விளையாட வாய்ப்பில்லை என்பது உறுதியாகியுள்ளது.

2ஆவது டெஸ்டிலும் அவர் ஆடுவது சந்தேகம் தான். ஏற்கனவே காயம் காரணமாக வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் முதலாவது டெஸ்டில் ஆடவில்லை. சகலதுறை வீரர் கமரூன் கிரீனும் விரல் காயத்தால் பந்து வீச முடியாத நிலைமையில் தவிக்கிறார். இப்போது ஹசில்வூட்டும் விலகுவது அந்த அணிக்கு பின்னடை வாகப் பார்க்கப்படுகிறது. (ஐ)

# மேற்குலகின் திட்டத்துக்கு இலங்கை பலியாகக்கூடாது!

## எச்சரிக்கின்றார் உதய கம்மன்பில

கொழும்பு, பெப். 07

பொருளாதார நெருக்கடியை பயன்படுத்தி 90களில் இந்தோனேசியாவை பிளவுபடுத்திய மேற்கத்திய நாடுகளின் திட்டத்தில் இலங்கையும் பலியாகக்கூடாது என ஆளும்கட்சியில் இருந்து பிரிந்து சென்ற சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தொடரும் கொடுப்பனவு நிலுவை மற்றும் கடன் நெருக்கடிகள் காரணமாக இலங்கை எதிர்கொள்ளும் சவால், கிழக்கு திமோர் சுதந்திரத்திற்கு வழிவகுத்த சூழ்நிலைகளைப் போலவே அமைந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இந் தோனேசிய ஜனாதிபதி சுஹார்டோவை இராஜினாமா செய்ய நிர்ப் பந்திக்கும் சூழலை மேற்கத் திய நாடுகள் எவ்வாறு பயன்படுத்திக்கொண்டன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் உதய கம்மன்பில குறிப்பிட்டார்.

எனவே பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் 13ஆவது திருத்



தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள அவர், அத்திருத்தம் இலங்கையை இன ரீதியாக பிளவுபடுத்தும் என்றும் எச்சரித்துள்ளார். (அ)

# நீதித்துறையில் புதிய நியமனங்கள்!

கொழும்பு, பெப். 07

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் கே.பி பெர்னாண்டோ, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் உயர் நீதிமன்ற நீதியரசராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

நீதியரசர் கே.பி பெர்னாண்டோ கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எல்.டி.பி தெஹி தெனிய ஓய்வு பெற்றதை யடுத்து நீதிபதி கே.பி பெர்னாண்டோ உயர் நீதிமன்றத்துக்கு நியமிக்கப்பட்டார்.

கடந்த வாரம் கூடிய அரசியலமைப்பு பேரவை, நீதியரசர் கே. பி.பெர்னாண்டோவை உயர் நீதிமன்றத்துக்கு நியமனம் செய்வதற்கு ஏகமனதாக ஒப்புதல் அளித்தது.

இதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணரத்ன நேற்று காலை கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இதன்படி அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக நீதியரசர் கே.பி.பெர்னாண்டோவுக்கு பதிலாக உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், மேல் நீதிமன்ற நீதிபதி எம்.ஏ.ஆர்.மரிக்கார் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். (அ)

# கம்பளை பணவைப்பு இயந்திரம் திருட்டு முன்னாள் போராளியும் தேடப்படுகிறார்!

கொழும்பு, பெப். 07

கம்பளை நகரில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் அண்மையில் பண வைப்பு இயந்திரம் (சி.டி.எம்) உடைத்து தூக்கிச் செல்லப்பட்டு, கிட்டத்தட்ட ரூ.8 மில்லியன் பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்தில்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் தொடர்புபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் கிளிநொச்சியை சேர்ந்தவர் என தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பண வைப்பு இயந்திரத்தை (சிடிஎம்) கொள்ளையடித்ததாகக் கூறப்படும் கும்பலின் மூளையாகச் செயல்பட்டவர் உட்பட இரண்டு உறுப்பினர்களை சிறப்பு பொலிஸ் குழு சமீபத்தில் கைது செய்தது.

ஆனால், சி.டி.எம் இயந்திரத்தை பொலிஸார் இதுவரை கண்டுபிடிக்கவில்லை. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுடன் குருநாகலில் பல இடங்களுக்குச் சென்றுள்ளனர். ஆனால் இதுவரை இயந்திரத்தை கண்டுபிடிக்க முடியவில்லை.

கொள்ளையில் ஈடுபட்ட மற்றவர்களை கைது செய்வதன் மூலம் பண வைப்பு இயந்திரத்தை கண்டுபிடிக்க முடியும் என பொலிஸார் நம்புகின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் 25ஆம் திகதி வாகனத்தில் வந்த நான்கு பேர் கொண்ட குழுவொன்று இந்தக் கொள்ளைச் சம்பவத்தை மேற்கொண்டுள்ளது.

கொள்ளைச் சம்பவம் நடந்து நான்கு மணித்தியாலங்களின் பின்னர் பேராதனை கலஹா சந்தியில் அவர்கள் கைவிட்டுச் சென்ற வாகனத்தை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

வாகனத்துக்கு அருகில் சாரதி கைகள் கட்டப்பட்ட நிலையில் கிடந்தார்.

வாடகைப் பயணம் செல்வதாகக் கூறி வட்ஸ்அப் மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய வாகனத்தைக் கொண்டு வந்ததாகவும், மேலும் இருவரை வாகனத்தில் ஏற்றிய பின்னர், தமது கைகளைக் கட்டி வீதியோரம் இறக்கிவிட்டு, அவர்களில் ஒருவர் காவல் இருந்ததாகவும், சிறிது நேரத்தின் பின்னர் வாகனத்தில் வந்தவர்கள் தம்மையும் ஏற்றியபடி பேராதனைக்கு சென்று, அங்கு வாகனத்தை கைவிட்டுச் சென்றுள்ளதாகவும் சாரதி தெரிவித்திருந்தார்.

சாரதி ஓய்வுபெற்ற விமானப்படை சிப்பாய் ஆவார். சாரதியின் வாக்குமூலங்களில் முரண்பாடுகள் மற்றும் சந்தேகங்கள் காரணமாக, அவர் பல நாட்கள் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டன.

வாகனத்தின் வாடகை என்று கூறி இரண்டு முறை அவரது வங்கிக் கணக்கில் ரூ.100,000 பணத்தைக் கொள்ளையர்கள் வரவு வைத்துள்ளனர்.

அந்த தொலைபேசி இலக்கம் மற்றும் வங்கியில் பணம் வைப்புச் செய்யப்பட்ட வங்கிக் கிளை ஆகியவற்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேகத்தின் பேரில் இருவரை கைது செய்ய முடிந்தது. (அ)

# கொழும்புத் துறைமுகத்தில் தவமிருக்கும் ரூ.5 பில்லியன் பெறுமதியான பொருட்கள்

கொழும்பு, பெப். 07

அரிசி, ஓடுகள், ஆடைகள் மற்றும் சொகுசு கார்கள் உட்பட 5 பில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களுடன் 89 கொள்கலன்கள் கொழும்புத் துறைமுகத்தின் முனையம் மற்றும் களஞ்சியசாலைகளில் பல வருடங்களாக தேங்கிக் கிடப்பதாக துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள பொருட்கள் களஞ்சியங்களில் பல வருடங்களாக சிக்கியுள்ளதாகவும், அந்த கொள்கலன்களுக்கான துறைமுகக் கட்டணத்தை இலங்கை சுங்கத்தினால் வசூலிக்க முடியாது எனவும் அமைச்சர் டி சில்வா கூறினார். (அ)

*13 ஆவது திருத்தம் குறித்து*

# அரசியல் கட்சிகளிடமிருந்து ஆலோசனைகள் வரவில்லை

கொழும்பு, பெப். 07

13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த தீர்மானம் தொடர்பாக அரசியல் கட்சிகளிடமிருந்து எந்தவொரு ஆலோசனைகளும் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பாக 08 ஆம் திகதி நாடாளுமன்றில் விளக்கமளிக்க உத்தேசித்துள்ள ஜனாதிபதி, அதற்கான ஆலோசனைகளை 04 ஆம் திகதிக்குள் வழங்குமாறு கட்சித் தலைவர்களிடம் கோரியிருந்தார்.

இருப்பினும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கைக்கு இதுவரை பதிலளிக்கவில்லை என உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

பல அரசியல் கட்சிகள் எதிர்ப்பை தெரிவித்தாலும், சில கட்சிகள் ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு ஆதரவாக அறிக்கைகளை வெளியிட்டாலும், அவை எழுத்துபூர்வமாக முன்மொழிவுகளை சமர்ப்பிக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துது என்ற ஜனாதிபதியின் யோசனைக்கு ஆதரவாகவோ அல்லது அதற்கு எதிராகவோ எந்தவித முன்மொழிவுகளும் ஜனாதிபதியின் அலுவலகத்துக்கு வரவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# பால் விலையும் உயர்கின்றது

கொழும்பு, பெப். 07

பால் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் ஒரு லீற்றர் பாலின் விலையை 20 ரூபாவினால் உயர்த்த மில்கோ நிறுவனம் முடிவு செய்துள்ளது.

நிறுவனத்தின் தற்போதைய பால் லீற்றர் ஒன்றின் விலை 140 ரூபாவாகும், இது 160 ரூபாவாக அதிகரிக்கப்படும் என அதன் தலைவர் ரேணுகா பெரேரா தெரிவித்தார்.

தனியார் துறையினர் ஒரு லீற்றர் திரவப் பாலை 160 ரூபாவுக்கு கொள்முதல் செய்கின்றனர். அதே நேரத்தில் சந்தையில் 450 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. (அ)

# 200 மில்லியன் டொலரை இலங்கை செப்ரெம்பருக்குள் மீள செலுத்தும்!

## பங்களாதேஷ் அமைச்சர் நம்பிக்கை

கொழும்பு, பெப். 07

200 மில்லியன் டொலர் கடனை எதிர்வரும் செப்ரெம்பருக்குள் இலங்கை திருப் பிச் செலுத்தும் என எதிர்பார்ப்பதாக பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை படிப்படியாக முன்னேறி வருகின்ற இந்தநிலை யில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு செப்ரெம்பர் வரையில், அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது என அவர்



குறிப்பிட்டார்.

2021 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட 200 மில்லியன் டொலர் கடனை கடந்த மார்ச் மாதம் இலங்கை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்.

எனினும், இலங்கை மேலும் கால அவகாசம் கோரியதை அடுத்தே பங்களாதேஷ் மத்திய வங்கி இலங்கைக்கு மேலும் ஆறு மாத கால அவகாசம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 13ஆவது...

13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். ஆனால், பாராளுமன் றத்தில் பெரும்பான்மையானோர் 13ஆம் திருத்தத்துக்கு ஆதரவாக இருக்கின்றனர். நாளைய தினம் புதிய சபை அமர்வில் ஜனாதிபதி இந்த விடயம் தொடர்பாக விசேட அறிக்கையொன்றை வெளியிட உள்ளார் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## இந்திய...

சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், நெடுந்தீவு தொடக்கம் நைனா தீவு, எழுவைதீவு, அனலதீவு, மாதகல், பருத்தித்துறை, வடமராட்சி வரை இந்திய மீனவருடைய ஆதிக்கம் மீண்டும் அதிகரித்துள்ளது.

இழுவை மடி ஊடாக எமது தொழிலாளர்களுடைய சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. கடந்த வாரம் 100 தொடக்கம் 150 வரையிலான படகுகள் கரை அளவுக்கு வந்து தொழிலாளர்களுடைய சொத்துக்களை நாசம் செய்துள்ளன.

கோவளம் கடற்கரை பகுதியில் மீனவர்கள் உடைய வலைகள் அறுக்கப்பட்டு சொத்துக்கள் நாசம் செய்யப்பட்டுள்ளன.

இதனை கட்டுப்படுத்துவதற்கு அமைச்சரும் அரசாங்கமும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## துருக்கி...

உள்ளூர் நேரம் அதிகாலை 4.17 மணிக்கு 7.8 ரிச்டர் அளவில் காசியான்டெப் நகருக்கு அருகே 17.9 கி. மீ. ஆழத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தால் 1500 இற்கும் மேற்பட்ட கட்டங்கள் அழிவடைந்தன. அடுக்கு மாடிக்குடியிருப்புகள் பலவும் இடிந்து விழுந்தன. இதனால், ஆழ்ந்த நித்திரையிலிருந்த ஏராளமானவர்கள் கொல்லப்பட்டனர் - காயங்களுக்கு உள்ளாகினர்.

முதலாவது நில நடுக்கத்தின் பின்னர் 12 மணி நேரம் கழித்து 7.5 ரிச்டர் அளவில் கஹ்ராமன்மாராஸ் மாகாணத்தின் எல்பிஸ்தான் மாவட்டத்தை இரண்டாவது நிலநடுக்கம் ஏற்பட்டது.

நேற்றிரவு வெளியான உத்தியோகபூர்வ தகவல்களின்படி,

துருக்கியில் ஆயிரத்து 498 பேர் உயிரிழந்தனர். சிரியாவில் அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் 430 பேர் இறந்தனர். ஆயிரத்து 315 பேர் காயமடைந்தனர். கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள வடமேற்கு பகுதியில் 380 பேர் உயிரிழந்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதேபோன்று, துருக்கியில் 5 ஆயிரத்து 385 பேரும் சிரியாவில் 2 ஆயிரம் பேரும் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மீட்பு பணிகள் தொடர்வதால் இறப்பு, மற்றும் காயமடைந்தோர் தொகையில் மாற்றங்கள் ஏற்படும். இதேசமயம், கிளர்ச்சியாளர் பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் வெளியாகவில்லை என்று கூறப்படுகின்றது. பெரும் இடிபாடுகளுக்குள் சிக்கியிருப்பவர்களை மீட்பதற்கு பல மீட்புக் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன. அத்துடன் சர்வதேச நாடுகளும் மீட்பு குழுக்களை அனுப்பி வைத்துள்ளன. அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட 45இற்கும் மேற்பட்ட நாடுகள் துருக்கிக்கு உதவுவதாக உறுதியளித்துள்ளன.

இதேவேளை, நிலநடுக்கத்தால் அழிவடைந்த கட்டடங்களில் 2 ஆயிரம் ஆண்டு வரலாற்றுப் பெருமைமிக்க காசியான்டெப் கோட்டையும் அடங்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

துருக்கி உலகின் மிகவும் தீவிர புவிநடுக்க மண்டலத்தில் உள்ள நாடாகும். கடந்த 84 ஆண்டுகளில் துருக்கியில் ஏற்பட்ட மிகமோசமான அழிவாக இது கருதப்படுகின்றது. (ஐ)

(முன்னர் வந்த செய்தி 12ஆம் பக்கத்தில்)

# அறிவான மக்கள் தொடர்ந்து ராஜபக்ஷக்களை ஆதரிப்பர்!

## ரோஹித அபேகுணவர்த்தன சொல்கிறார்

கொழும்பு, பெப். 07

கட்சி என்ற ரீதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு தயாராக உள்ளோம். அறிவார்ந்த மக்கள் ராஜபக்ஷர்களுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களில் நிச்சம் வெற்றிப் பெறுவோம் என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

கட்சி என்ற ரீதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு தயாராக உள்ளோம். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தேர்தல் நடத்தப்பட வேண்டுமா என்பது குறித்து தனிப்பட்ட முறையில் அவதானம் செலுத்த வேண்டும். வெற்றியோ, தோல்வியோ தேர்தலில் போட்டியிடுவோம்.

தேர்தலை கண்டு அஞ்சவேண்டிய தேவை எமக்கு கிடையாது. சிறீ லங்கா பொதுஜன பெரமுன 2018 ஆம் ஆண்டு முதல் இடம்பெற்ற தேசிய தேர்தல்களில் அமோக வெற்றிபெற்றது. இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அமோக வெற்றிப் பெறுவோம். சிறீ லங்கா பொதுஜன பெரமுன கிராமங்களுக்கு அதிக சேவையாற்றியுள்ளது.

ஆகவே நாட்டு மக்கள் பொதுஜன பெரமுனவுக்கு ஆட்சி அதிகாரத்தை மீண்டும் ஒப்படைப்பார்கள். பிரதான நிலை அரசியல் களத்தில் பொதுஜன பெரமுனவுக்கு எந்த அரசியல் கட்சிகளும் சவால் அல்ல, மக்கள் விடுதலை முன்னணி நாட்டில் எவ்வாறான நிலையை தோற்றுவித்தது என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

மக்கள் விடுதலை முன்னணியினருக்கு மக்கள் மத்தியில் செல்ல முடியாத காரணத்தால்தான் அவர்கள் தேசிய மக்கள் சக்தி என்று பெயரை மாற்றிக் கொண்டு செல்கிறார்கள்.

ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு தீங்கிழைக்கவில்லை. அளப்பரிய சேவையாற்றியுள்ளார்கள். அறிவார்ந்த மக்கள் ராஜபக்ஷர்களுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களில் நிச்சம் வெற்றிப் பெறுவோம் - என்றார். (ஐ)

## வடக்கின்...

நேற்று மாலை கிழக்கு மாகாண எல்லையை அடைந்தது. தொடர்ந்து பயணித்த பேரணி இரவு 10 மணியளவில் திருகோணமலை வெருகலில் மூன்றாம் நாள் பயணத்தை நிறைவு செய்தது.

யாழ்ப்பாணப் பல்லைக்கழகத்திலிருந்து கடந்த சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமானது. முதல்நாளில் இரணைமடுவில் பேரணி நிறைவடைந்தது. இரண்டாம்நாள் பயணம் ஞாயிற்றுக்கிழமை பரந்தனிலிருந்து ஆரம்பமாகி முல்லைத்தீவு பண்டாரவன்னியன் சிலையருகே நிறைவடைந்தது.

மூன்றாம் நாளான நேற்றைய தினம் பண்டாரவன்னியன் சிலை அருகே பேரணி ஆரம்பமானது. அங்கிருந்து நகர்ந்த பேரணி தொல்பொருள் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட குருந்தூர்மலை பகுதியை சென்றடைந்தது. அங்கு ஆக்கிரமிப்புக்கு எதிராக மக்கள் குரல் எழுப்பினர். தொடர்ந்து நகர்ந்த பேரணி அளம்பில் துயிலும் இல்லத்தை அடைந்தது. அங்கு, துயிலும் இல்லத்தை மீட்பதற்கான போராட்டத்தை செய்ய வேண்டும் என்று அப்பகுதி மக்களின் சார்பில் தாயார் ஒருவர் உருக்கமான கோரிக்கையை முன்வைத்தார். அத்துடன், அங்கு மாவீர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்பின்னர், பௌத்த ஆக்கிரமிப்பு மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள செம்மலை - நீராவியடி பிள்ளையார் ஆலயத்தை பேரணி அடைந்தது. அப்பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமிலிருந்த இராணுவத்தினர் அங்கு குவிந்திருந்தனர். போராட்டக்காரர்கள் ஆக்கிரமிப்பை நிறுத்துமாறும் இராணுவத்தை வெளியேறுமாறும் உணர்ச்சிகரமாக கோஷமிட்டனர். தொடர்ந்து பிள்ளையார் ஆலயத்தில் வழிபாடுகளை தொடர்ந்த பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் எல்லையாக பறையனாறு பகுதியில் பெரும் எழுச்சியாகப் போராட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து தென்னமரவாடியூடாக பேரணி நகர்ந்து திரியாய் பகுதியை அடைந்தது. கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் பேரணியாக வந்து வடக்கிலிருந்து பேரணியாக வந்தவர்களை வரவேற்றனர். இதைத் தொடர்ந்து இரு பேரணிகளும் ஒன்றாகி திருகோணமலை நகரம் நோக்கி நகர்ந்தன. திருகோணமலை நகரத்தில் பட்டாசுகள் வெடித்து வரவேற்பு அளிக்கப்பட்டது.

தொடர்ந்து நகர்ந்த பேரணி தமிழ் மக்கள் படுகொலைகள் செய்யப்பட்ட கிளிவெட்டி, குமாரபுரம் பகுதிகளில் அஞ்சலி செலுத்தியது. இரவு 10 மணியளவில் வெருகல் சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்தை அடைந்த பேரணி மூன்றாம் நாளை நிறைவு செய்தது. இன்றைய தினம் மட்டக்களப்பை அடையும் பேரணி அங்கு போராட்டத்தை நிறைவு செய்யும். (ஐ)

## பயங்கரவாத...

இந்த விடயம் முஸ்லிம், தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் கிளப்பியுள்ளது.

இஸ்லாமிய அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதத்தால் அதிக தாக்கத்துக்கு உள்ளான நாடாக பாகிஸ்தான் அறியப்படுகின்றது. தவிர, தனது அயல் மற்றும் எதிரி நாடான இந்தியாமீது பயங்கரவாதத் தாக்குதல்களை இந்த நாடு ஊக்குவிக்கிறது என்ற குற்றச்சாட்டும் அந்த நாட்டின்மீது ஏற்கனவே உள்ளது.

இத்தகைய சூழ்நிலையிலேயே கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமிய இளைஞர்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரகத்தால் வழங்கப்படும் இந்தப் புலமைப்பரிசில் தொடர்பாக பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

மாணவர்களை இலகுவாக மூளைச்சலவை செய்து இலங்கையில் மதம், இன நல்லிணக்கம் - உறவுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படலாம் என்ற எச்சரிக்கையும் பிரசுரங்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குவதில் இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்துக்கு வழங்கப்பட்டுள்ள எல்லையற்ற அதிகாரமும் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 18 மில்லியன் டொலர் - சுமார் 663 கோடி இலங்கை ரூபாயும் பலத்த சந்தேகங்களை எழுப்பி உள்ளதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, பாகிஸ்தான் ஆண்டுதோறும் 2 ஆயிரம் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குகிறது. இந்தப் புலமைப் பரிசில்கள் மாதம் 50ஆயிரம் ரூபாய் பெறுமதி வாய்ந்தவையாகும். இஸ்லாமிய இளைஞர்கள் மாத்திரமே இதற்காக தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பதுடன், இது தொடர்பில் பகிரங்கமாக தகவல்கள் அளிக்கப்படுவதில்லை என்பதும் குறிப்பி டத்தக்கது. (ஐ)

# தேர்தலை காலம்தாழ்த்த அரசு திட்டமிடுகின்றது!

## எதிர்க்கட்சியும் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 07

தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் பல்வேறு வழிகளிலும் முயற்சித்து வருகிறது. ஆனால், அந்த முயற்சிகள் வெற்றியளிக்கப் போவதில்லை. மாறாக, ஏதேனுமொரு வழியில் தேர்தல் காலம் தாழ்த்தப்படுமாயின் அதற்கு எதிராக சர்வதேசத்தை நாடுவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளை நாம் ஆரம்பித்துள்ளோம். மக்கள் மத்தியிலும் தேர்தலுக்கான எதிர்பார்ப்புக்கள் அதிகரித்துள்ளன. ஆனால், தேர்தலை எதிர்கொள்வதில் காணப்படும் அச்சத்தால் பல்வேறு வழகளிலும் அரசாங்கம் அதனைக் காலம் தாழ்த்த முயற்சிக்கின்றது.

தேர்தல் செலவுகளுக்கு வழங்குவதற்கு பணம் இல்லை என்று கூறுவதற்கு அரசாங்கம் வெட்கப்பட வேண்டும். நிதி நெருக்கடியால் தேர்தல் செலவுகளுக்கான பணத்தை வழங்குவது சிக்கல் என்று நிதி அமைச்சு நீதிமன்றத்துக்கும் அறிவித்துள்ளது. ஆனால் இது போன்று தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் எந்தவொரு முயற்சிகளும் வெற்றியளிக்காது. - என்றார்.

## வடக்கு...

நாட்டின் சுதந்திர தினத்தை கரிநாளாக அறிவித்து வடக்கிலிருந்து கிழக்கு மாகாணத்துக்கு பேரணிக்கு யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் அழைப்பு விடுத்தனர்.

இதன்படி, கடந்த சனிக்கிழமை ஆரம்பமான போராட்டம் மூன்றாம் நாளான நேற்று திங்கட்கிழமை திருகோணமலை வெருகலில் நிறைவடைந்தது. இன்று காலை 9 மணிக்கு வெருகலிலிருந்து ஆரம்பமாகும் பேரணி முற்பகல் 10 மணியளவில் கதிரவெளியை அடையும் அங்கு மட்டக்களப்பு மக்கள் பேரணிக்காரர்களை வரவேற்பார்கள். தொடர்ந்து ஓட்டமாவடி ஊடாக பிற்பகல் 3 மணியளவில் மட்டக்களப்பு நகரை அடையும்.

இதேசமயம், அம்பாறை திருக்கோவிலில் காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகும் பேரணியும் பிற்பகல் 3 மணியளவில் மட்டக்களப்பு நகருக்குள் நுழைந்து இரு பேரணிகளும் ஒன்றாக மாபெரும் நிறைவுக்கூட்டம் நடைபெறும் காந்தி பூங்காவை அடையும். அங்கு பிரடகன உரை வெளியிடப்பட்டு போராட்டம் நிறைவடையும்.

இந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் விதமாக தமிழ் மக்களை பெருந்திரளாகப் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# கொழும்பு வந்தார் பான் கீ மூன்



கொழும்பு, பெப். 07

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நேற்று அதிகாலை இலங்கை வந்தடைந்தார்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் அவர் சிங்கப்பூரிலிருந்து இலங்கை விமான நிறுவனத்துக்குச் சொந்தமான யூ.எல் 309 என்ற விமானத்தின் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்தார் என தெரிவிக்கப்பட்டது.

இவரது விஜயத்தின்போது நிலையான அபிவிருத்தி மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான பல ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவுள்ளார் என ஜனாதிபதியின் ஆலோசகர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இன்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்கவுள்ளார்.

தென் கொரியாவின் குளோபல் கிரீன் க்ரோத் இன்ஸ்டிட்யூட்டின் தலைவராக உள்ள பான் கீ மூன், அந்த அமைப்பின் சார்பிலும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவுள்ளார்.

இலங்கையில் அமைக்கப்படவுள்ள காலநிலை மாற்ற பல்கலைக்கழகம் தொடர்பாகவும் அவரது இலங்கை விஜயத்தின்போது கலந்துரையாடப்படவுள்ளது. (அ)

# தர்ஷன ஹந்துன்கொட கைது!



கொழும்பு, பெப். 07

சமூக ஊடக ஆர்வலர் தர்ஷன ஹந்துன்கொட கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய வளாகத்தில் வைத்து அவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.

தர்ஷன ஹந்துன்கொட டுபாயில் இருந்து நாடு திரும்பியபோது கொழும்பு குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தினர் அவரை கைது செய்தனர்.

தர்ஷன ஹன்துன்கொட யூடியூப் அலைவரிசையில் அரசியல்வாதிகள் பலரை கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

மேலும் சமகாலத்தில் இடம்பெறும் நிகழ்வுகள் தொடர்பில் தனது கருத்துக்களை சமூக ஊடகங்கள் வாயிலாக அவர் வெளியிட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# 2009 அளித்த உறுதியை மகிந்தவுக்கு பான் கி மூன் ஞாபகமூட்டவேண்டும்!

## மனோ கணேசன் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, பெப். 07

**2009ஆம் ஆண்டு மே மாதம் உள்நாட்டுப் போர் முடிவடைந் ததை அடுத்து, இலங்கையின் முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செய்த கூட்டறிக்கையை நினைவு படுத்துவதற்காக அவரை பான் கீ மூன், சந்திக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.**

பான் கீ மூன் கடைசியாக 2009 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கைக்கான விஜயத்தின்போது போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்தார் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

2009 மே 24 அன்று, பான் கீ மூனும் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டனர்.

அதில் மகிந்த ராஜபக்ஷ தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை மேம்படுத்த (13+) விருப்பம் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ, சர்வதேச மனித உரிமை விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உலக அமைப்புக்கும் அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி மூனுக்கும் உறுதியளித்தார்" என மனோ கணேசன் தெரிவித்தார்.

எனவே, மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து, ஐ.நாவுக்கு வழங்கிய உறுதிமொழியை நினைவுபடுத்துமாறு பான் கீ மூனுக்கு அழைப்பு விடுப்பதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

"இன்று அரசாங்கத்தின் மிகப் பெரிய அரசியல் கட்சியின் தலைவராக மகிந்த ராஜபக்ஷ பதவி வகிக்கிறார்.

எனவே, இந்த நினைவூட்டல் அனைத்து சிறிலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், ராஜபக்ஷக்களை ஆட்சிக்கு வருவதற்கு ஆதரவளித்த பௌத்த மதகுருமார்களுக்கும் முக்கியமானதாக இருக்கும்" என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மேலும் தெரிவித்தார்.

# மார்ச் 9 தேர்தல் நடக்காது; அரசாங்கம் பிற்போடும்!

## வாசுதேவ நாணயக்கார எம். பி.



கொழும்பு, பெப். 07

திட்டமிட்ட வகையில் உள்ளூராட்சி மன்ற சபை தேர்தலுக்கான வாக்கெடுப்பு எதிர்வரும் மார்ச் 09 ஆம் திகதி இடம்பெறாது. தேர்தலுக்கு அரசாங்கம் முழுமையாக தயார் இல்லை என்பதால் தேர்தல் பிற்போடப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு தயாராக உள்ளோம். எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளோம். முதலாவது பிரசார கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி சிலாபம், பொல்காவெல ஆகிய பகுதிகளில் இடம்பெறவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்கெடுப்பை எதிர்வரும் மார்ச் 09 ஆம் திகதி நடத்த தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இருப்பினும், திட்டமிட்ட வகையில் மார்ச் 09 ஆம் திகதி வாக்கெடுப்பு நடைபெறாது. சிறீ லங்கா பொதுஜன பெரமுனவும், ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தலுக்கு தயார் இல்லை என்பதால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.

சுதந்திர மக்கள் கூட்டணியில் இருந்து சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன விலகிச் செயல்படுகிறார். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்குப் பின்னர் அவர் கூட்டணி விவகாரத்தில் ஈடுபாடுடன் செயல்படுவதில்லை.

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவரை தவிர ஏனைய உறுப்பினர் கூட்டணியில் இணக்கமாக செயல்படுகிறார்கள். இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நிச்சயம் வெற்றிப் பெறுவோம். தாம் தேர்தலுக்கு தயார் இல்லை என்பதால் மக்களின் அடிப்படை உரிமையை கேள்விக்கு உள்ளாக்கும் அரசாங்கத்தின் செயற்பாடு வெறுக்கத்தக்கது - என்றார். (ஐ)

# முட்டை இறக்குமதி கட்டாயம்

கொழும்பு, பெப். 07

எதிர்வரும் நாட்களில் கட்டாயம் முட்டை இறக்குமதி செய்ய நேரிடும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

எதிர்வரும் பண்டிகை காலங்களில் முட்டை தட்டுப்பாடு ஏற்படக்கூடும்.

எனவே, அதனை தவிர்க்கும் விதமாகவே முட்டை இறக்குமதி செய்ய வேண்டி ஏற் படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டார். (அ)

# உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு பணம் வழங்குவது மிகச் சிரமம்!

## அரசின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 07

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான பணத்தை வழங்குவது மிகவும் சிரமமான விடயமென அரசின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

திறைசேரியிடம் போதிய நிதியின்மையே இதற்கான காரணமென அவர் கூறினார்.

தற்போது சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் நிலவும் நிதி நெருக்கடி, இதில் பாரிய தாக்கத்தை செலுத்தியுள்ளதாக குறித்த சிரேஷ்ட பேச்சாளர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் தேவைக்கேற்றவாறு நிதியை விடுவிப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்கவிடம் வினவியபோது, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்பது அரசியலமைப்பினூடாக உறுதிப்படுத்தப்பட்ட கடமை என்பதால், பகுதி பகுதியாகவேனும் நிதி வழங்கப்படுமென நிதி அமைச்சு ஏற்கனவே தெரிவித்துள்ளதாக கூறினார்.

அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படுமென தாம் நம்புவதாகவும் சமன் சிறி ரத்நாயக்க மேலும் குறிப்பிட்டார். (அ)

# சீன ஜனாதிபதியிடன் தொலைபேசி உரையாடலுக்கு தயாராகும் ரணில்!

கொழும்பு, பெப். 07

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சீன ஜனாதிபதிக்கும் இடையில் தொலைபேசி உரையாடல் ஒன்று கோரப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்போது, இலங்கை கடன் மறுசீரமைப்பு மற்றும் இரு தரப்பு உறவுகளின் எதிர்காலம் குறித்து ஜி ஜின்பிங்குடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விவாதிக்க உள்ளார் என தகவலறிந்த தரப்புக்களை கோடிட்டு, செய்தி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் என்பனவே இலங்கைக்கு இருதரப்பு கடன் வழங்கும் நாடுகளாகும்.

இந்தநிலையில் சர்வதேச நாணய நிதியத்துடன் 2.9 பில்லியன் டொலர்கள் திட்டத்தை பெற்றுக்கொள்ள இந்த நாடுகளின் உத்தரவாதங்கள் முக்கியமாகும். இந்தியாவும் ஏற்கனவே 10 வருடக்கால கடன் ரத்து மற்றும் 15வருட மறுசீரமைப்புக்கு உடன் பட்டுள்ளது.

இதனை சர்வதேச நாணய நிதியமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

ஜப்பானும் இதேயளவான இணக்கத்துக்கு வரும் என்று எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

எவ்வாறாயினும், சீனா, 2 வருடகால கடன் ரத்தை மாத்திரம் அறிவித்துள்ளது.

இது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு போதாது என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்தே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சீன ஜனாதிபதியுடன் தொலைபேசி கலந்துரையாடல் ஒன்றுக்கு தயாராவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.